இது, எமது, சுவடி எண் 378 b/D-764 அகத்தியர் சூத்திரம்-36 போன்றது.

வரிசை எண் : 3321 சுவடி எண் : 1654-a

தெட்சிணாமூர்த்தி இந்திரசாலம், அஷ்டகர்மம் முதற்காண்டம்

ஏடுகள் : 30 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 36×3 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

காலம் :

ஈசுவர வருஷம் வையாசி மாதம், 23-ந் தேதி சோமவாரம் முகிந்தது.

குறிப்பு:

இது, எமது சுவடி எண் 825-a/D-1649 போன்றது.

—★★—

வரிசை எண் : 3322 சுவடி எண் : 1654-b

தெட்சிணாமூர்த்தி இந்திர சாலம் 2-ஆம் காண்டம், வாதகாண்டம் — 300

ஏடுகள் : 40 கி. எண்ணிக்கை: 2500 அளவு : 36 × 3 செ மீ
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

காலம்:

யீசுவர வருஷம் சித்திரை மாதம் 16-ந் தேதி திரவாரமும் தசமியும் மகா நட்சத்திரமும் கூடின சுபயோக சுபதினத்தில் எழுதி முகிந்தது. முற்றும்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 852 b/D 1650 போன்றது.

வரிசை எண் : 3323 சுவடி எண் : 1654-c

தெட்சிணாமூர்த்தி இந்திரசால வித்தை 3-ஆம் காண்டம் — 300

ஏடுகள் : 47 கி. எண்ணிக்கை : 2500 அளவு: 36 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 825-c/D-1651 போன்றது.

வரிசை எண் : 3324 சுவடி எண் : 1654-d

தெட்சிணாமூர்த்தி இந்திரசாலம் 4-ஆம் காண்டம்-மாந்திரீகம்

ஏடுகள் : 41 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 36×3 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி பொருள் : மாந்திரீகம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 825-d/D-1652 போன்றது.

அகத்தியர் நாடி சூத்திரம்

வரிசை எண் : 3325 சுவடி எண் : 1655-a

ஏடுகள் : 31 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 30×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

சீர் கொண்ட வயித்திய நாதர்த்
திருவுளம் சிறந்து நண்பால்
பார்கொண்ட நோயர் தம்மைப்
புறக்கிறங் கையோ டெட்டாம்
வேர் கொண்ட நாடி பார்த்து
மெய்யினைத் தொட்டுப் பார்த்து
யேர் கொண்ட ரூபம் பார்த்து
யியல் மொழிப் பார்ப்பன் மாதோ! —1

முடிவு :

வாகை யிளநீர் தன்னை
வாங்கினார் நாடி வாதம்
போதவே கோப முள்ள
பொருமினார் நாடி பித்தம்
கோதைசேர் குழலார் தம்மை
கூடினும் பித்த மாகும்

யிகைமா முனிவர் சொன்னார்
இயல்புட னறியத் தானே! — 01

திருச்சிற்றம்பலம், சிவமயம்
அகத்தியர் நாடி வாகட நூல் முற்றும்

காலம் :

சுபகிருது வருஷம் கார்த்திகை மாதம் 21-ந் தேதி

குறிப்பு :

இதில் பட்ச வாத சன்னி பிழையாக் குறி, பித்தசன்னி பிழையாக் குறி, தாது லட்சணம், நீரில் பார்க்கிற குறி, மூன்று நாடி நிதானம முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3326 சுவடிஎண் : 1655-b

அகத்தியர் வைத்திய சூத்திரம் — 300

ஏடுகள் : 31 கி. எண்ணிக்கை : 800 அளவு : 30 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 433-e D-931 போன்றது,

வரிசை எண் : 3327 சுவடி எண் : 1655-e

சரக்கு சுத்தி

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 80 அளவு : 30 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியகூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

22-வது தொகுப்பு

தொடக்கம் :

செய்யப்பா கைமுறையாச் செய்து
செய்தொழிலைப் பாகமாய் செய்யச் சொல்லு
வையப்பா சரக்கை யெல்லாம் சுத்தி செய்து
மாட்டப்பா சுத்திக்கு வகையைக் கேளு

முடிவு :

பூனீறு சுத்த சலத்திலே காச்சி
ஊத்தி வெய்யிலில் வைக்கவும்
நிலை உப்பு பாறை உப்பு மாத சுத்தி

குறிப்பு :

இதில், மருந்து சரக்குகளை சுத்தம் செய்யும் முறைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 3328 சுவடி எண்: 1655-d

மகாசங்கத் திராவகம்

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 25 அளவு: 30×3 சென்டி மீட்டர்

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியென்ற கரியுப்பு வளைய லுப்பு
அரனணியு மதியுப்பு வெடியி லுப்பு
வேதியென்ற உவருப்பு னாவி யுப்பு
மிஞ்சிவகை யோர்பலமாய் வேண்டி பின்னும்

முடிவு :

தாக்கப்பா எந்திரத்தின் குடத்தின் வாயில்
சந்துவாய்க் கொழுந்தரைத்து சீலை சாத்து
வாக்கப்பா திசைக்கடிகை அங்கி யிட்டால்
மழையெனவே வருநீரை வாங்கிப் பீங்கான்
நோக்கப்பா ....

குறிப்பு :

இதில், மகா சங்கத் திராவகம் செய்முறை கூறப்பட்டுளது.

—★★—

வரிசை எண் : 3329 சுவடி எண் : 1655-e

அகத்தியர் வைத்திய கர்ம சூத்திரம்-300

ஏடுகள் : 60 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 30 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

பூரணமாக மும்மூலப் பொறியேச் சூடாய்
புகையெழும்பி மேகமதாய் சிரசு சூடாய்
காரணமாய் நீரோற்கும் பீனசமே கொள்ளும்
கனலெழுந்தே வாயுவாத கபால மெல்லாம்

முடிவு :

புத்தியாய் பிளப்பதற்கு சாக்கிரத்தே சொல்லு
புகழான மனவாசி வாயு வேகம்
முத்தியா மிருவினையும் தேசி
முதலான சொற்கபத முத்தி தானே! —300

அகத்தியர் வைத்திய கற்மமாதி சூத்திரம்
முற்றும்

குறிப்பு :

இதில்; மேகம் இருபதுக்கும் பெயர், சயரோக நிலை, கரிசாலை லேகியம் பவள வங்க பற்பம், கும்மட்டி நிலவாகை பேதி அயச் செந்தூரம் வேப்பின் பட்டைத் தைலம், பூனாகச் சூரணம்; நூறுவித வலிக்குத் தைலம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3330 சுவடி எண் : 1655-f

அகத்தியர் பூரண சூத்திரம்

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 300 அளவு : 30 × 3 செ. மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நில வாகை லேகியம்

பிறிந்துபோம் கற்பத்தால் வந்த தோஷம்
பிழைபொறுக்கு மோவயிரங் கண்ணால் பார்த்தால்
முறிந்துபோ மலக்கட்டு கட்டிச் சானால்
மோசமடா மலக்கட்டு தீரச் சொல்வேன்.

முடிவு :

துடித்தமந் தாரகாசம் சுவாச காசங்
கனபாண்டு விடுத்தோர் காதம் போகும
மின முனிவிளம்பி னாரே ! — 102

காலம் :

சுபகிருது வருஷம் மார்கழி மாதம் 8-ந் தேதி எழுதி நிறைவேறினது.

முத்தும்.

குறிப்பு :

உதிரி ஏடுகளாக உள்ளன. இதில், அமுர்த சர்க்கரை லேகியம், கால் பித்த வெடிப்புக்கு, சகல விஷ கடிக்கும் முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண்: 3331 சுவடி எண்: 1655-g

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 17 கி. எண்ணிக்கை : 500 அளவு : 30 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

கிராணி ஆறுக்கும் மருந்து

அபினி பலம் — 1, பரங்கிப்பட்டை பலம் — 1,
கஞ்சா பலம் — 1, ஆக் பலம் — 3,
சீரகம் பலம் — ½, மிளகு பலம் — ½,
கோஷ்டம் பலம் ½, கொத்தலி பலம் ... ½,

முடிவு :

மண்டூரம் வராகனெடை — 1,
பூச்சாறு விட்டு ....

கொடிவேலி .... குளுகை பண்ணி
............ல சட்டிகுக் வேர் பூசி ....க்க
செந்தூரமாம்.

குறிப்பு :

இதில் கெவுளி காதல், காக்கை சாத்திரம், கிருஷ்ண அப்பிரக செந்தூரம், நாக பற்பம், பீனிசத்துக்கு மருந்து, நீரடைப்புக்கு, கல்லடைப்புக்கு, முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3332 சுவடி எண் : 1656-a

குணவாகடம்

ஏடுகள் : 47 கி.எண்ணிக்கை : 1500 அளவு : 29 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

யெட்டடி மூன்று நான்கும் ...... ரெண்டு தாமே.
வாக்குண்டாம் ... . தமக்கு
வாதம் 80 — க்கு
எண்பது வாதந்தன்னில் இருவகை மருந்து காணில்
நன்பன வுரைக்கு மேலே .... நாற்பது வாதமாகும்

முடிவு :

நெருங்கிய .... விளைத்தும் அஞ்சவே நாவும்
மருவருத்து மிஞ்சிவரும் மின்னனை யாரி குணங்கள்
மேவியிருந்தாலே வர்க்கும்.

அன்னசமா விக்க லென்றறி
தெட்சணாமூர்த்தி முன்னிற்க வேண்டியது
இந்த விக்கலுடைய லெட்சணத்தை
செம்மையா யறிந்து கொள்ளவும்.

குறிப்பு :

இதில, நீர்பீனிசம் குணம், ரத்தப் பீனிசம் குணம்' மகோதர குணம், கவுசை குணம், வாத காமாலை குணம் சுரம் வரும்வாறு, வாய்வுநோய் வரலாறு, பண்டிதர்

செய்கை, மேகத்தினால் காணுகிற பெரும்பாட்டுக் குணம் முதலான பல தலைப்புகள் உள்ளன,

இதன் பின்னர் 'தோசத்துக்கு குணம் அறியும்படி' என்ற ஒரு ஏடு உள்ளது.

வரிசை எண் : 3333 சுவடி எண் : 1656-b

அகத்தியர் குழம்பு

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 350 அளவு : 29×3 செ.மீ

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பருப்பதந் தன்னில் வாழும்
பரமனா ரருளி னாலே
× × × × ×
பெருபல முனிவன் றானும்
பேசிய மருந்து கேளே ! — 1

பேசிய மருந்து கேளு
× × × × ×
வகை வகை களஞ்சு வாங்கே — 2

முடிவு :

அய்ய மன்றி நோய்தீரும்
அருள்சேர் முனிவன் சொன்னமொழி
மெய்யே யென்று குழம்புதனை
மேதினி யோற்கும் மருந்து செய்யே ! — 53

குறிப்பு :

இதில், அகத்தியர் குழம்பு செய்முறை, உபயோகம், அனுபானம், பேதங்கள் முதலியன உள்ளன.

இதன் பின்னர், மருந்துகள், மந்திரங்கள், யந்திரங்கள் உள்ளன.

வரிசை எண் : 3334 சுவடி எண் : 1656-c

சாதிலிங்கக் குழம்பு

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 29×3 செ.மீ.

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சோதிலிங்கம் தென்பொதிகை
சுவாமியடி தாள்பணிந்து
சாதிலிங்கறன் குழம்பைச்
சாற்றக் கேளு

முடிவு :

கண்டுபார் மண்ணுலகில் அண்டனார் தாமும்
அருள்செய்த குழம்பதனை
பண்டிதரே இந்த முறை பார்
குருசுவாமி துணை

குறிப்பு :

இது, சாதிலிங்கக் குழம்பு செய்முறை கூறுகிறது.

வரிசை எண் : 3335 சுவடி எண் : 1656-d

கணக்கதிகாரக் கணக்கு பலம் அறிதல்

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 10 அளவு : 29×3 செ. மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : இலக்கியம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சிவினை விதிவசமே யிந்த சென்மங்கள்
விதிவசம்

நாளி மண்ணுக்கு பலம் — 17 யென்றும்

நாளி மணலுக்கு ,, — 20 ,,

நாளி நெல்லுக்கு ,, — 6 ,,
நாளி அரிசிக்கு ,, — 10 ,,
நாளி உப்புக்கு ,, — 10 ,, சொல்லப்படும்,

முடிவு :

நா உ தண்ணி - கணக்கு

நாளி ஒன்றுக்கு உத்தம தண்ணீர் பலம் - 12 யென்றும்
நாளி ,, மத்திம ,, ,, — 15 யென்றும்
நாளி ,, அதம ,, ,, — 17 யென்றும்
சொல்லப்படும்

குறிப்பு :

இது ஒரு அரிய செய்தியாகக் காணப்படுகிறது.

வரிசை எண் : 3336 சுவடி எண் : 1656-e

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 2 சி. எண்ணிக்கை : 50 அளவு . 29×3 செ.மீ.

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

யெட்டிக்கி நாவல் யெழுதோணிக்கித்
தரணிக்காய்
வட்டமுலை தாமரையாம் ஊமத்தைக்கு-ஒட்டியதோர்
ஆவரைக்கு கள்ளி அரளிக் கிடுகடுக்காய்
மேவிய நெய்தேனுக்கு வெந்தக்கரு பாவம்

முடிவு :

வாளப்பா வெளியில் விட்டேன்
வைத்தியத் துக்காக
மானிலத்தில் நோயாளி
மயங்காமல் தான்

குறிப்பு :

இதில், வைத்தியர்க்குச் சாபநிவர்த்தி ஏடு உள்ளது. பின் பகுதியில் மாந்திரீகம் உள்ளது

வரிசை எண் : 3337 சுவடி எண் : 1656-f

சண்டமாருதச் செந்தூரம் - நொண்டிச்சிந்து

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 100 அளவு : 29 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றறாது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

சீரார் கிணேசருட பாதம்
சிந்தைக்குள் ளெண்ணி வந்தனை செய்தோமே
.... கவன மலருத்த பதங்
கருத்துற் றுலகில் சகல பொருள் படைத்த வாதி

முடிவு :

கண்ட மாலையும் போம் வயித்தியஞ்
செயிபவரே நோய்க்கி வல்ல அனுப்பானஞ்
சொல்லுகுறோம். சன்னி பதிமூன்றும்
பூண்டுச் சாத்தில்ச் செலுத்தவும்
ஆத்திவிடும்

குறிப்பு :

இதில், கண்டமாலை முதலான நோய்களுக்கு மருந்து கூறப்பட்டுள்ளது.

வரிசை எண் : 3338 சுவடி எண் : 1656-g

மந்திரங்கள்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 100 அளவு : 27 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் அறியக்கூடவில்லை பொருள் : மாந்திரீகம்

நிலைமை : பழுது முழுமை முற்றறாது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஸ்ரீ ராம ஜெயம்

ஓம் ரீங் வசி வசி
வசி சிதை சத்துருக்கள்
பேரேச் சொல்லி சிபம் பண்ண
சத்துருக்கள் வசியமாகும்.

முடிவு :

கந்திரு தாலைவர்ங்கால்
நரகண்டகந் தீரும்

குறிப்பு:

இதில், தொடக்க ஏடு, கடைசி ஏடுகள் ஆகியவற்றில் மந்திரத்திற்குரிய சக்கரங்கள், மிருகங்களின் உருவங்கள் முதலானவை எழுதப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3339 சுவடி எண் : 1657-a

அகத்தியர் குருநூல் — 600

ஏடுகள் : 147 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 32×3 செ. மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கருணைதரும் ஐங்கரனே காப்பு வாணி
கலந்துயிந்த சூஸ்த்திரந்தான் கருவாய்ப் பாட
திருஉமையாள் மனோன்மணித்தாய் செப்ப கேட்டுத்
தெளிந்தகுரு நூலாகத் திரட்டிப் பாடி

முடிவு :

வெண்டாம நூல்களிது போலும் விடாதே
நூல்களொ ருவருக்குங் —620
கண்டா லறுநூர் வெளியாகக்
கடாசி யெழுதி முடிந்ததுவே !

முற்றும்

காலம் :

ஆங்கில வருஷம் ஆனி மாதம் 21-ந் தேதி மங்களவர்ர நாள் பூரட்டாதி நட்சேத்திரமும் னாளிகை பதினஞ்சில் ராச்சால வேளையிலெழுதி முகிந்தது.

குறிப்பு :

இதில், முப்பு வழலை, வியாதிக்குக் கூட்ட, அயமண்டூர செந்தூரம், பாரிச வாய்வு, சிந்தாமணி, முன் சுத்தி செய்த சரக்கில் சிந்தாமணியரைக்க, முன் செந்தூரத்துக்கு அனுபானம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

கடைசி ஏட்டின் பின்புறம், 'பூபதி செய்யும்படி' மருந்து எழுதப்பட்டுளது.

இதன் பின்னர் பாஷாணக்கட்டு எழுதிய 2 ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3340 சுவடி எண் : 1657-b

அகத்தியர் சூத்திரம் — 10

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 75 அளவு : 32×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 813/D-1521 'இராமதேவர் பாடல் —10' போன்றது. பெயர் மாற்றம்

வரிசை எண் : 3341 சுவடி எண் : 1658-a

சூதமுனி சூத்திரம்

ஏடுகள் : 17 கி. எண்ணிக்கை 400 அளவு : 25×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : சூதமுனிவர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு ;

இது, எமது சுவடி எண் 844-1/D-1761 'சூதமுனி சூத்திரம்—50 போன்றது.

வரிசை எண்: 3342 சுவடி எண் : 1658-b

சித்தர் வெண்பா (அகத்தியர் —16)

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 25×3 செ மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ் .

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 764-c/D-1531 'அகத்தியர் வைத்தியம் 16' போன்றது. இங்கு பெயர் மாற்றமாயுளது.

வரிசை எண் : 3343 சுவடி எண் : 1658-c

செந்தூரம்

ஏடுகள் : 22 கி. எண்ணிக்கை : 500 அளவு : 25×3 செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கணபதியென்றிட × × × × கருமமில்லை
நூல்
ஈயம் கழஞ்சு. மருதோன்றிச் சாற்றில்
மூன்றுதிர முருக்கி யெடுத்து வைத்துக் கொள்ளவும்.

முடிவு :

கட்டு கட்டு சங்சிவாகா யென்றுதியானிச்சு
சக்கரத்தைக் கீழே தாபிச்சு அதின்மேலே
புடம் போடவும்.
அல்லாதே பேனால் புடயெடுபட்டுப் போம்.

குறிப்பு :

இதில், பாஷாணக்கட்டு, ரச குளிகை, கோடக சாலை, நாகம், வெள்ளைக் கீரைத் தண்டு, குகை முறை, இருப்புச் செம்பு, விராலி கீரைத் தண்டு, ரச குளிகை கட்ட, பற்ப வகை, நாக பற்பம், வெள்ளிய பற்பம் முதலானவை உள்ளன.

வரிசை எண் : 3244 சுவடி எண் : 1658-d

அனுமார் மந்திரம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 25×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியகூடவில்லை பொருள் : மாந்திரீகம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

வங் — வங் — நமசிவாய நமா
அங் — அங் — வயநம சி
லெங் — லெங் — சிவாய நமா
நங் — நங் — நமசிவாய

முடிவு :

முன்னே முன்னே பன்னீராயிரம் உருச்
செவிச்சுக் கொண்டு மறுபடி விஷந்
தீண்டின யிடத்தில் பார்க்க மீளும்
கை கண்டது
தேவி சகாயம்

குறிப்பு :

இதில், உபாதியான பேருக்கு மந்திரிக்க, சத்துரு நாவடக்கம், ஸ்ரீ வசீகரம் அமுரியெடுக்க சாபம் நீக்க, விஷத்துக்கு மந்திரம், விஷகடிக்கு மந்திரம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 3345 சுவடி எண் : 1658-e

திருமந்திரம்

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 400 அளவு : 25×3 செ.மீ

பக்கத்திற்கு : 6வரிகள் ஆசிரியர் : திருமுலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சூடருங் கண்டருந்ர்தூக்கு சமனிடை
நாடு நிமிளையு நலமன வீரரும்
தேடும் வளலை திசைக்கொன்று கூட்டியே
ஆடும் அமுரியால் ஆட்டிநீ பூசிடே — 1

முடிவு:

இது கோடா சோகி யென்று பேர்
முனங்குப்பி ....சூ வெண்...........
சத்தம் அடங்கினால் எரியாலறவிட்டு
குப்பியெ ....

குறிப்பு :

இதில், பூநீற்றுச் சுண்ணமுறை, கண்டாக்குரு, வாசிட்டத்தில், அனாதியேனம் முதலியன உள்ளன.

—+ + +—

வரிசை எண் : 3346 சுவடி எண் : 1659

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 68 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 27 ×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

விஷம் சகலத்துக்கும் அவிழ்தம்

வெண்மெழுகு நாபிரசம் மேலான துரிசு வில்லை
வங்காளப் பச்சையும் வளர்சீனக் காரமும்
வளர்தேசிப் பழச்சாற்றில் ஒத்து நிறை யாகவே
ஓரைந்து நாளரைத்து ஒருமித்து மிக்து

முடிவு :

கடுக்காய் ரோகணி வெள்ளைக் காக்கணம்
வேறும் விராகன் மூன்று நல்லுரேன
வாளமென்ன விராகன் யெட்டு
நல்ப்பிரண்டைச் சாற்றாலே யரைப்பாய் சா...........

குறிப்பு :

இதில், சுரத்துக்கு கிசாயம், இருமலுக்கு கிசாயம், விக்கலுக்கு, பாசாணமுறிவுக்கு, வெகு மூத்திரத்துக்கு மேகநாத எண்ணெய், அமுர்த சஞ்சீவி முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 33டு சுவடி எண் : 1660

பிரம்ம முனி வைத்திய கருக்கிடை சூத்திரம்-700

ஏடுகள் : 192 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 31½×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர்: பிரம்மமுனிநாயனார் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது. எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நன்றாக.

திருவளரு மெஞ்ஞான சோதி பாதம்
செப்பரிய கிளைசனொடு கந்தன் பாதம்
மருவுருவா யாதியந்தம் வெளியுந் தாண்டி
யகண்டுநின்ற சின்மயத்தின் பாதம் போற்றி

முடிவு :

ஆமென்ற யிவையெல்லாம் வகைவிபர மாக
அறியாத பாளைக்கு மறிய வேண்டி
பாமென்ற யென்னூலில் வெளியாச் சொல்லி
பாடிவிட்டேன் யெழுநூ றாக முற்றே! —711

காலம் :

1352 ஆம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 30-ம் தேதி திங்கட்கிழமை ரெண்டு மணிக்கி மேல்பட பிரமமுனியெழுநூறு சூத்திரம் யெழுதி முடிந்தது; முஸ்த்தும், மீனாட்சியம்மன் துணையுண்டாகவும். யிப்படிக்கி யெழுதின விபறம் ஜாலனா (யக்கர்).

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 452- a/D-1005, எண் (190-b/D-1349)போன்றது.

இதில், வயித்தியத்தின் செய்கை விபரம், வியாதியாளர் குறி, மகாமேக

ராசாங்க லேகியம் மோகவிபரம், வச்சிராதிக்கபாட மாத்திரை முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3348 சுவடி எண் : 1661

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 168 கி எண்ணிக்கை : 4000 அளவு : 28×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நவலோக செந்தூரம்
சிவமயம்

அரை பொடி உருக்குச் செம்பு
ஆன வெண்கலம் பித்தளை
இரதம் வெண்காரம் லிங்கம்
இனியதோர் கெந்த கந்தான்

முடிவு :

அரப்பு சீயக்காய் தேய்த்து முழுகவும்
தீரும் வ்யாதி படலம், திரமிரம், காசம், கண் வியாதி,
பயித்தியம், பித்த வெட்டை, கண் புகைச்சல்,
சகலமும் தீரும்

குருசாமி துணை.

குறிப்பு :

இதில், லேபனத்துக்கு, மேகத்துக்குத்தயிலம், திரிபலாதிச் சூரணம், கிராணி, பெரும்பாட்டுக்கு, ரவுத்திரச் சிலந்திக்கு, வாதத்துக்கு, அமுர்த சக்கரைச் சூரணம், இருபது வகை வெட்டை நீரழிவுக்கு, கழிச்சல், அதிசாரம் முதலான பலதலைப்புகள் உள்ளன.

இதன் பின், வீரியம் (வைத்தியம்) எழுதிய ஏடுகள் இரண்டு உள்ளன.

வரிசை எண் : 3349 சுவடி எண்: 1662

அகத்தியர் வாக்கியம் பரிபூரணம் — 1200

ஏடுகள் : 290 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 33 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

பூரணமாய் நிறைந்த பூரணமே காப்பு
போதமய மானபூ ரணத்தைப் பாட
காரணமாய்க் கருவுருவாய் யெங்கும் நிறைந்திருந்த
கண்மணியி னடுவாகிக் கருணைதரும் பொருளை

முடிவு :

வத்தாத பாக்கியமும் வயதும் ....
.... மொடு ஞானம் சித்தி
வித்தான மாய்கையத்து சுத்த மான
.... வெளிசேர் முத்தே ! — 1201

குரு பாதமே ......

காலம் ;

தெட்சிணா மூர்த்தி கிருபாகடாட்சத்தினாலே விசுவாவசு வருஷம் தை மாதம் .... கூடின சுபதினத்தில் வயித்தியம் ஆறுமுகம் பிள்ளை வேதாந்த ...— .... முற்றும். குருபாதமே கெதிஉண்டாகவே ... . வேலுதவியாக வேண்டியது.

சிவகிறுபை உண்டாகவே ... .

குறிப்பு.

இது, எமது சுவடி எண் 920-/D-1864 போன்றது. கடைசி 9 ஏடுகள் பிற் பகுதி ஒடிந்துள்ளன.

வரிசை எண் : 3350 சுவடி எண் : 1663-a

சண்டமாருத செந்தூர நொண்டி சிந்து

ஏடுகள் : 5 கி எண்ணிக்கை : 100 அளவு : 34×3 செ.மீ

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சீரார் கிளைசனுட பாதம்
சிந்தைக் குள்ளெண்ணியே வந்தனை செய்தோ
றாருமா முகவன் பலருற்ற பதம்
கருத்துற் றுலகில் சகல புகழ்படைத்த வாதி

முடிவு :

செந்தூரங் கொண்டவர்க்கு திரேக
சித்திவரும் மனமபத்தி வரும் யென்றாய்
அருளாலே நோய்கள் யில்லை யற்றே
சிந்து சொல்லு முற்றே

குறிப்பு :

இதில், செந்தூரம் செய்முறை. தீரும் நோய்கள் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3351 சுவடி எண் : 1663-b

இராமபாண செந்தூர நொண்டிச் சிந்து

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 100 அளவு : 34×3 செ.மீ

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பார்புகழ் தென்மலைவா ழகத்தியன்
பதத்தைப் பணிந்து தவப் புலத்தியனாம்
நீர்கடல் சூழுலகில் மக்கள் பிணி நீங்கிட
மருந்தொன்றைப் பாங்குறவே தந்தை யருளென

முடிவு :

அம்புவி மானிடர்மேல் அருள்சு ரந்து
ஆயதொரு நோய்களுக்குச் சாயகம் போற்
கும்பமுனி புலத்தியர்க்கே முந்தியருள் கூறிய
இராமபாணச் சிந்தூர முற்றே !
வேலுமயிலுந் துணை

குறிப்பு :

இதில், இராமபாணச் செந்தூரம் செய்முறையும் தீரும் நோய்களும் கூறப் பட்டுள்ளன.

வரிசை எண் : 3352 சுவடி எண் : 1663-c

அகத்தியர் குழம்பு

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 60 அளவு : 34 × 3 செ. மீ

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நன்றாக குருவாழ்க குருவேதுணை
பருவதந் தன்னில் வாழும்
பரமனா ரருளி னாலே
பொறுமையாய் உலகில் வாழும்
புண்ணிய சனங்க ளுக்கு

முடிவு :

பெருந்த வினையாம் விரியன் விடம்
போந்து தீரும் பெரியோர் தான்
வருந்தா தையும் நீர் மருந்தின் வளியே
சொன்னேன் மறவீரே !

குறிப்பு :

இது, முழுமையாக இல்லாததால் செய்யுள் தொகை அறியக் கூடவில்லை.
இது, எமது சுவடி எண் 1656-b போன்றது.

வரிசை எண் : 3353 சுவடி எண் : 1664

சித்திராரூடம்

ஏடுகள் : 100 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 18 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 8—9 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் ? பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

வேகமா நெறிகள் சேரும்
வினைகளும்
தாகம்போக விடாத தளர்ச்சியும்
சோக வாரியும் னால்வருந்துன்பமும்
போக வானை முகத்தானைப் போற்றுவாம்

நூல்

வேதியர் முதலாஞ் சாதி
விடத்தினால் துஞ்சு வோரை
ஓதிய மந்தி ரத்தால் மருந்தினால்
லுணத்து வோர்கள்

முடிவு :

குருவே சரணம் நீராய நிலனாய் வெளிகாலோவாய்
முதல்வா. வேலாயுதா சரணம் 75
ஆகவிருத்தம் ஆரூடம் 133, மருந்துப்படலம் — 275
ஆக பாட்டு 408.

காலம் :

ருத்ரோத்காரி வருஷம் பங்குனி மாதம் 25-ந் தேதி ஆதித்த வார நாள் மூலா நட்சத்திரமும் திசமியும் கூடின சுபதினமான அமுர்த சித்தி யோகத்தில் விருதாச பயங்கர வளநாடான கானாட்டு கானாடு காத்தானி லிருக்குங் கண்ணாழரில் கோட்டயக் கொல்ல சின்னாண்ாசாரி புத்திரன் உத்தமன் சித்திராரூடம் எழுதி நிறைந்தது முற்றும்.

குறிப்பு :

இதன் தொடக்கச் செய்யுள் எமது சுவடி எண் 592 D. 1210 அகத்தியர் கரும சூத்திரம் 300-ல் காணப்படுகிறது. சித்திராரூடம் நமதுமகால் சுவடிகள் போலல்லாமல் இது முழு சுவடியாகக் காணப்படுகிறது.

இதில், தாதுவேஷணம், முதலான தலைப்புகளும், மருந்துப்படலமும் உள்ளன. இதில் பாம்புகளின் பெயர்கள், அவை கடித்தால் மருந்து முதலியன கூறப் பட்டுள்ளன.

வரிசை எண் : 3354 சுவடி எண் ; 1665-a

அன்னூற்றிரட்டு (திருமூலர் நாடிப்பரீட்சை)

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 300 அளவு : 30×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 – 8 வரிகள் ஆசிரியர் : (திருமூலர்) பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

உன்னிய கெற்பக் குளியாம் வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்த மறுதிவியா
வன்னியும் வாயுவு மாயுறு சுக்கில
மன்னிச் சமனாய் வளக்கு முத்நமே ! — 1

முடிவு :

வியாதியள் போக வெகுநாள்ச் சிடமுறப
பாதித்திரை நறை பாங்காய்த் தவிழ்ந்திட
அயாதி ஞானம் அஞ்சாகும் சித்தியே ! — 113
(ஒருவரி இல்லை)

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 745-j D-147 திருமூலர் நாடிப்பரீட்சை வாகடம் என்ற தலைப்பில் காணப்படுகிறது. செய்யுள் அமைதி கொண்டு தலைப்பு கொடுக் கப்பட்டது.

இதில், பிராணாதி ஐந்து வாயுக்களின் இலக்கணங்கள் நாடி பார்க்கும் விதம் மரணநாடிக் குறிகள், இடகலை, பிங்கலை, நாடி விபரம் முதலானவை பேசப் படுகின்றன.

வரிசை எண் : 3355 சுவடி எண் : 1665-b

மந்திரம்

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 150 அளவு : 30×3 செ. மீ.
பக்கத்திற்கு 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாந்திரீகம் (மருத்துவம்) நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

தற்மம் அதற்மம்மடா கருடா
அதம்ப மென்று போகாதே
செவ்விரியன் குருவிரியன்
எட்டடி விரியன் எழுனூரத்தி மூக்கன்.

முடிவு :

பித்தகாசஞ் செய்யுங் குணம்

சரீரமெங்கும் பித்தமிஞ்சி தலையிலேறி தானிருந்து
துரிதமாக நீரிறங்கி துலங்கு கண்ணைத் தான் மறைக்கும்
மலங்கு கண்ணில் நீர்வரும். வகையாய்த் தலையில் வலி எடுக்கும்
பித்த காச மென்று பாத்து அறிந்து கொள்வீரே ! —35

குறிப்பு :

இதில் புத்தி செய்யும் குணம், பித்த காசஞ் செய்யுங் குணம், பிறைகாசஞ் செய்யுங் குணம், பித்த சுரஞ் செய்யுங் குணம், வாத சுரஞ்செய்யுங்குணம், முதலியன உள்ளன.

தலைப்பு போல இது மாந்திரீகம் என்றல்ல; குணபாடம் எனலாம்.

வரிசை எண் : 3356 சுவடி எண் : 1665-e

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 150 அளவு : 30×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஒருபோதி லிருபோதில் முப்போதைக்கும்
உற்றகுளிர் காச்சல்வந்து விடுமதாகும்
வருதாகமொடு புகைந்சீர் நொய்மீறி
வாதிக்கு நாவினிலமுழப் பொலத் தோண்றுள

முடிவு :

பிலங்கொண்ட ஆமையளுங் கொட்டுக்
கையகலுங் கணங்காஷம் போமே !
விளிபல நோய்போம் பூனாகம் நீர்ச்சிருப்
பைம்போகஞ் சுரஞ்சன்னி மாளே இளைப்பு.

குறிப்பு :

இதில், விஷதோஷத்துக்கு, ரத்த சினாலி, சீதசிஞ்ஞை, கிஷ்ட்டின சிஞ்ஞை, சுரம் வரும் வாறு, தோஷம் வரும்வாறு, நாரத்த பிஞ்சினுடைய குணம். ஆகிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3357 சுவடி எண் : 1665-d

தன்வந்திரி சாத்திரம்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 100 அளவு : 30×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை முற்றற்றது எழுத்து : தமிழ்,

குறிப்பு :

இது, தன்வந்திரி நாடி சாத்திரமாகும். எமது சுவடி எண் 837-a/D-1709. அகத்தியர் நாடி சூத்திரம் —30 போன்றது. இதில் 15 செய்யுட்களே உள்ளன.

★ ★ ★ ★

வரிசை எண் : 3358 சுவடி எண் : 1665-e

வாகடம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 150 அளவு : 30×3 செ.மீ.
பகத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

22-வது தொகுப்பு

தொடக்கம் :

ஹரி : ஓம்

பார்பதி உமையே கேளாய்
பகர்ந்த வாகட நூல்
சீர்பெற நினைந்து செய்வார்
சிந்தையி லிருந்து நாமே
பார்புகழ் செல்வத் தோடும்
பகரிலிச் சிவிகை ஞானம்
நேருடன் போற்றி போற்றி
நிகர்மந்திரி வாழ்வ தாமே ! —1

முடிவு :

வாதநாடி மருவிய பித்தமும்
தீதிலா சிலேஷ்ட்டும னாடி
மோதவொண் டொடி ரெண்டு
காலோடில் சேத மில்லை
செலேஷ்ட்டும காயமே. —28

திருமூல சாமியார் ரெட்டிடிக்கவும்.

குறிப்பு :

இதில், நாடி பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன

வரிசை எண் : 3359 சுவடி எண்: 1695-f

தன்வந்திரி சாத்திரம்-சிந்தாமணி

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 120 அளவு : 30×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

குருவே துணை

மன்னவர்க்கு வந்தநோய் மாறவே வாகடத்தை
தின்னமுடன் யான் துணிந்து செப்பவே — அண்ணலுட
சேனைத் தலைவன் முன் பாய்ச்சென்றகலைக் கோட்டிடையில்
கானிலிது நற்சிவனை காப்பு

முடிவு :

மூலா தாரங்கள் தன்னின்
    மூண்டெழு மசைவு தோன்றி
மேலிடை பிங்கலாதி
    மேற்கொண்டு விரைவி னாத்து
தூல சூட்சத்தைப் பற்றிச்
    சுழிமுனை தன்னை மூட்டிச்
சாலவே யனிரண்டங் குலத்தைச்
    சிறந்தே. —28

குறிப்பு :

இதில், சரீர ஆதாரங்கள் பேசப்படுகின்றன.

வரிசை எண் : 3360 சுவடி எண் : 1665-இ

தன்வந்திரி சாத்திரம்-சிந்தாமணி

ஏடுகள் : 54 கி. எண்ணிக்கை : 1200 அளவு : 30×3 செ. மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

குருவே துணை

மன்னவர்க்கு வந்த நோய் மாறவே வரகடத்தைத்
தினமுடன் யான் துணிந்து செப்பவே-அண்ணலுட
சேனைத் தலைவன் முன்பாய்ச் சென்ற கலைக் கொடிடையில்
கானிலிது நற்சிவனை காப்பு.

முடிவு :

விஞ்சுமண் டூகந் தோன்றில்
    விரவிய மதுர வேகம்
கொஞ்சமில்ப் புளுக்க னஞ்சுண்டன
    குணமுறு காரந் தானே! —273

குறிப்பு :

இதில், தன்வந்திரி பகவான் வைத்தியம் அகத்தியர் துவக்கம்; அஷ்ட குறியறிதல், சரீரசாத்திரம், பிறப்பு, வளர்ப்பு பிராண வாயுகுணம், நாடி நடையறிதல், நாடி கலக்கம், குரலிசைக் குணம், விழிக்குணம், ஆகியவை உள்ளன.

இதன் பின்னர் குணவாகடம் எழுதிய ஏடு ஒன்றுளது.

வரிசை எண் : 3361 சுவடி எண் : 1665-h

பஞ்சாட்சர விதிமுறை

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 10 அளவு : 30×3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாந்திரீகம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அம் நமசிவாய அம் என்று
நூறாயிரம் உருச் செவிக்க லோகவசியம்

முடிவு :

சவுங் சிவாயநம இது சரசுர பஞ்சாச்சரம
இது செவிக்க சுரமுண்டாம்

குறிப்பு :

மாந்திர்க முறையில் உள்ளது, இது:

இதன் பின்னர், உதிரி ஏடுகளாக நாகரச வங்கபற்பம், விருத்தம் நொண்டிக் கொளையடி மந்திரம், ஆகாச மோடி, கொளையடி மந்திரம்-2, தண்ணீர் மந்திரிச்சு குடுக்க, முதலான 10 ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3362 சுவடி எண் : 1665-i

பட்டினத்தார் பாடல்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 600 அளவு : 20 × 3 செ மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : பட்டினத்தார் பொருள்: இலக்கியம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

முந்தித் தவங்கிடந்து முன்னூறு நாட்சுமந்து
அந்தி பகலாய்ச் சிவனை யாதரித்து
தொந்தி சரியச் சரியப் பெத்தெடுத்த
தாயாற்கோ யெரியத்தணல் மூட்டுவேன்.

முடிவு :

கட்டியமுது கடன் கழித்து
முட்டமுட்ட வருவாரும் போவாரும்
வஞ்சமதத் தாயாரே திருவாரூர்
யெல்லையிலே சேர்
சுப்பிரமணிய துணை
ஆறுமுகன் துணை.

குறிப்பு :

இது, பட்டினத்தார் தன் தாயாருக்கு இடுகாட்டில் தீவைக்கும் போது பாடிய பாடலாகும்.

வரிசை எண் : 3363 சுவடி எண் : 1666

அகத்தியர் குருநூல்—600

ஏடுகள் : 162 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 40 × 3செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : வைத்தியம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

கருணைதரும் ஐங்கரனே காப்பு வாணி
கலந்து இந்த சூத்திரந்தான் கருவாய்ப் பாட
திருவுமையாள் மனோன்மணித்தாய் செப்பக் கேட்டு
தெளிந்தகுரு நூலாக திரட்டிப் பாடி
குருமகிமை சித்தியுண்டாம் ஞானம் வாய்க்கும்
குபேர னெனநிதி மருந்துங் கூடும்
பெருமை மெய்க் கீர்த்தியுண்டாம் சித்தர்க் கெல்லாம்
பொருநூலைக் குறிக்கி இந்த அறுநூற் தானே ! — 1

முடிவு :

அறியுங் குருவே ரெட்டது
அடித்தேடி நடந்தாலும்
பிரியும் வாசி யுண்டாகும்
பெரியோர் நாமே அறிவோ மென்பார்
குறியுங் குணமு மன்புகண்டால்
கோடிக் கொன்று சொல்வார்கள்
செரியுஞ் சிலநாள் அருகிருத்தி
சோமனதைக் கண்ட பின்பே ! — 624

குறிப்பு

இதில் 624 செய்யுட்கள் இருப்பினும் 'முற்றும்' என்று இல்லாமையால் குறைச் சுவடியாகக் கருதப்படுகிறது, எழுத்துக்கள் அழகாக உள்ளன.

இதில், அயச் செந்தூரம், மண்டூர செந்தூரம், அண்டவாயு குணம், மாத்திரைப் பெருமை, பாண்ட வழலை, வாதராட்சதன் மாத்திரை, கஞ்சாக் குடிக்கை, தங்க பற்பம், தேவிபூசையில் நாலுவிதம், பித்தமேகக் குணம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3364 சுவடி எண் 1667-a

அகத்தியர் குருநாடி -130

ஏடுகள் : 36 கி. எண்ணிக்கை : 500 அளவு : 29×3 செ.மீ.

பக்கத்திற்கு : 5—7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள்: மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சீர்பெறு முனிவர் வேதந்
 தெளிந்து பின் னூலகத் தோ ....
பேர்பெறுங் கருவி லுற்ற
 பிணிபல துணைந்து பார்க்க
ஊர்பல நாடிக் கெல்லாம்
 முயிர்பெறு நாடி மூன்றில்
சேர்குரு நாடி நேர்மை
 சியலுடன் கூற லுற்றாம்! —1

முடிவு :

தாகந் தண்ணீர் தாகித்து
 தார்க்கவே கொண்டால் போதும்
மேகம் போலே குழல்மடவார்
 விரையைப் பின்னும் பொசிப்பந்து கேள்
ஆகஞ் சேருங் கண்டத்துள்
 ளதனைக் கொள்ளில் மிடாஷமும்
பாகஞ் சேரும் முடிதன்னில்
 பகர்ந்தார் பகர்ந்தார் பண்டிதரே! —130

அகத்தியர் நூத்திமுப்பது குருநாடி எழுதி
 நிறைந்தது முற்றும்
 அகஸ்தியர் மகாரிஷி ரெட்சிக்க வேண்டியது

குறிப்பு :

இதில், கைகளில் உள்ள பித்த, வாத, சிலேட்டும நாடி பார்த்து விபரங்கூறல் சொல்லப்பட்டுளது.

வரிசை எண் : 3365 சுவடி எண் . 1667-b

திருமூலர் அன்னாத் திரட்டு

ஏடுகள் : 22 கி. எண்ணிக்கை : 400 அளவு : 29×3 செ.மீ,
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

ஹரி ஓம் நன்றாக
உன்னிய கெர்ப்பக் குழியாம் வெழியிலே
பண்ணி நாதம் பகர்ந்த பிறுதிவியாம்
வன்னியும் வாயுவும் ஆயுறு சுக்கில
மன்னிச் சமனாய் வளக்கு முதகமே! —1

முடிவு :

தன்றிட லோகர்க்குத் தானாகச் செய்முறை
மன்றியே சித்தாக மகாவியாதி போக்குமே !
ஆதிமூலம் லெட்சிக்கவும்.

சிவகுரு பாதத்தை நம்பினோர்க்கு சித்திக்கும்
வைத்தியந்தான் ஞானயோகம். அவபாதஞ் சிவத்துரோகம்
செய்யானாகில் அன்னையென்று மாதர்களை அழைப்பானாகில்
.... செய்யானாகில் அனுதினமும் சிவன் பாதம் பெறுவான்.

காலம் :

விஜய வருஷம் வைகாசிமாதம் 15-ந் தேதி

குறிப்பு :

இது, கெர்ப்பம் பற்றிய குறிகள், மருத்துவம் முதலனவைகளைக் கொண்டது.

வரிசை எண் : 3366 சுவடி எண் : 1668

பதார்த் சிந்தாமணி

ஏடுகள் : 94 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 26×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8—9 வரிகள் ஆசிரியர் : சிவபெருமான் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

மணக் கெண்ணை தன்னை..............குடலேத்தம் போமே

ஹரி ஓம் நன்றாக

உலகமும் யாவையும்...........கணபதி காப்பாமே.

நூல்

திருமணி மார்பன் தங்கை சிகமருள் பொருட்டா லோக
ரிருவினை நீக்கி யூண யிரங்கியே சிவனைக் கேட்க
அறுசுவை ரசவர்க் கத்தை யாறுமைக் கருளிச் செய்யக்
குருவெனும் நந்தி கேட்டுக் குவலையந் தன்னி லீந்தார்

முடிவு :

வெய்ய கள்ளிப்பால் குணங்கேள்
விரும்பினவை தோண—விட்டுநோய்
கய்ய வாய்வு குணம்முடன் சிறந்த
பீலிக பெருவயறு
துய்ய வாதம் கோதா தான்
துலங்கு மூலப்பிணிக் கலங்கனான்
உய்யுங் குறிப்பு மூல வயத்தில்
ஓங்கும ...மை வியாதிபோம் – 635

குறிப்பு :

ஏடுகளின் தலைப்புகள் ஒடிந்துள்ளன. இதில் ஆவின் தயிர், எருமைத் தயிர், வெள்ளாட்டுத் தயிர், செம்மறி குறும்பாட்டுத் தயிர் குணம், வெல்லம், கல்கண்டு, சர்க்கரை குணம், மாம்பழம், பலாப்பழம், விளாம் பழம், எலந்தைக்கனி, நாவல் கனி குணம், முள்ளிக்காய், ஆதண்டங்காய், அத்திக்காய், மூக்குத்திக்காய், மணத்தக்காளி கொட்டிக்கிழங்கு, கருணைக் கிழங்கு குணம், முதலான பல பொருட்களின் குணங்கள் கூறப்பட்டுள்ளன.

காப்பேட்டில், ஆஞ்சனேயர் சஞ்சீவி பருவதம் எடுத்துவரல், யானை குதிரை து அம்பாரி, புலி, சிங்கம், கிளி முதலான சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன.

—★★—

வரிசை எண்: 3367 சுவடி எண் : 1669-a

நாகராரூடம் (சித்திராரூடம்)

ஏடுகள் : 67 கி. எண்ணிக்கை : 1200 அளவு : 18×3 சென்டி மீட்டர்

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுள்ளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக

தந்தைதா யாவானுஞ் சாரதியுங் காவானும்
அந்தமில்லா னென்ப நமக்காவானும்
எந்தனுயிர் தானாகுவானுஞ் சாணாகுவானும்
அருள்க் கோனாகுவானும் குரு.

நூல்

அடல்மிகு அனந்தன் வாசுகி தற்கன்
காற்கோடகன் வெய்ய
படமிகு பற்பனோடு மகாபற்பன்
சங்கபாலன்

முடிவு :

வளிப்பட்டு வந்தகுருவின் கமல பாதம்
வன்சீர மீதினில் வைத்து வணங்க வல்லா
ரெழுதரிய திருமேனி யீசனென்ன
யிமையவருந் தொழுதேத்த இருப்பர் தாமே ! —189

சித்திராரூடம் எழுதி நிறைந்தது முற்றும்.

காலம் :

பிரமாதி வருஷம் தை மாதம் 13-ந் தேதி நிறைந்தது முற்றும்
குருசாமி லெட்சிக்க வேணும். சிவகடாட்ச முண்டாக வேணும்.

குறிப்பு :

இது, பிற சித்திராரூடத்தின் வேறாயது போல் காணப்படுகிறது.

இதில், பாம்புகளின் சாதிகள், கடிக்கும் காலம், மருந்து முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3368 சுவடி எண் 669-h

விஷ வைத்தியம்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 18 × 3 செ மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வைத்தியம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக

அனந்தனே அருக்க னாகும்
அன்று வாசுகியே திங்கள்
தனந்தரு தக்கன் செவ்வாய்
சவடிகார்க் கோடன் புந்தி

முடிவு :

முருக் கெருச்சிலை கராமோ டிந்துப்பு
பெருக்கவேணுமோ பேதை மனிதரே
தருக்கிமெய் நீர்கொடு நாசியில்
.... — 17

குறிப்பு :

இதில், பாம்பு கடிகளுக் குண்டான மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3369 சுவடி எண் : 1670-அ

(நாடி சாத்திரம்) (கோடா சூளிகை)

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 250 அளவு : 30 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்.

...... ம நாடி திரமாகவும் கோழி
மாடைப் பிறாவுங் ....
ழியான் குருவிபோல நடந்து வுடனே
அட்டை போலே .... றிவான்
எ.து. அசீரண நாடி மந்திச் சிருக்கும்

முடிவு :

வெங்காரம் அரைக் கழஞ்சு கூட்டி
ஆட்டு மூத்திரத்தில்க் கொள்ளவும்
கோடாசூளிகை முற்றும்.
குருவே துணை
வேறு

குறிப்பு :

இதில் முதல் ஏடு இரண்டு ஓரங்களும் ஒடிந்துள்ளதால் தலைப்பு அறியக் கூடவில்லை.

வரிசை எண் : 3370 சுவடி எண் : 1670-b

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 145 கி எண்ணிக்கை : 4500 அளவு ; 30×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கோடா சூழி

சாதிலிங்கம் வெங்காரம் சுக்கு
மிளகு திப்பிலி யிந்து பூவனம்
நெல்லிமுள்ளி வசம்பு வச்சிரதந்தி
பெருங்காயம் அசமதாகம்

முடிவு :

மாரபுவலி ஆமசூலை அரிசி குடல்வாதம்
அஷ்ட்ட பீலிகை, குன்ம பீலிகை, மகோதரம்
அசீரணம் பலவாய்வு இதுமுதலான தெல்லாம்
தீரும்

குறிப்பு :

இதில், தலைப்பு ஓரம் ஒடிந்துள்ளது. புளியாரை நெய், கடுக்காய் நெய், பெரும்பாட்டுக்கு, சாதிலிங்கக் கட்டு, வீரிய விருத்திக்கு, சுக விரோசனம், துன்மாங்கிஷ அடைப்புக்கு, கண்ட மாலைப்புண்ணுக்கு, முகசன்னி, தந்தசன்னி, கிஷ்ட்ண அப்பிரக செந்தூரம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

—★★—

வரிசைஎண்: 3371 சுவடி எண் : 1670-c

நயன சாஸ்த்திரம்

ஏடுகள் : 48 கி. எண்ணிக்கை: 1500 அளவு : 30×3 செ மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

மாதுமை பாகர் சொன்ன
மாமறை முதலா ராய்ந்து
தீதுகள் வாரா தென்று
திருவுளத் துதித்த போது
ஆதிமா முனிதான் சொன்ன
ஆயுறு வேதத் துள்ளே
நாதனார் தெரிந்த
நயனமாம் விதிகண் டாயே ! — 1

முடிவு :

வுதிரம் பேதியாம். இதுக்குத் தீரும் வியாதி
இடுப்புப் பிடிப்பு, வாயுவுச் சூலை தீரும்
டுகுடனே மொன்று சாப்பிடவும்.

குறிப்பு :

இதில், வெண்ணெய், கோபத்துக்கு உண்டை, சந்தனாதியுண்டை, காசத்துக்கு கந்தாதி உண்டை, பூஞ்ச சந்தனாதி யுண்டை, தாம்பூராதி யுண்டை முதலான மருந்துகள் கூறப்பட்டுள்ளன. சூரிய காந்தம், சந்திரகாந்தம், கண்ணுக்குத் தேவதாளி நெய் முதலானவைகள் சிறப்பாக உள்ளன.

வரிசை எண் : 3372 சுவடி எண் : 1671-a

தன்வந்திரி சாத்திரம்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 40 அளவு : 25×3 செ. மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : தன்வந்திரி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக
வல்லாதி

நாதமென்ற பெண்ணாசைக் கின்பந் தேடி
நாதமுறிந் தகலாத மேக மூறி
ஆதரவில் லாதவிஷக் கடியு மீறி
அகலாத குஷ்டமெல்லாம் அகலக் கேளு
நீதமகா வல்லாதி தன்மந்திரி சாத்திரம்
நிறையான செங்கோட்டை பலமீ ரஞ்சு.

முடிவு :

கால காலாஸ்திரி நில்லகண்றி
தத்ததினாயிரங்கு வீசம்
(சக்கரம் ஒன்று உளது)

குறிப்பு :

இதில், மருந்தும் மந்திரமும் உள்ளன.

வரிசை எண் : 3373 சுவடி எண் : 1671-b

நாடி நூல்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 50 அளவு : 25×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 322-a/D-614 போன்றது.

★——★

வரிசை எண் : 3374 சுவடி எண் : 1671-c

வைத்திய சிந்தாமணி

ஏடுகள் : 210 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 25×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : மரேசுபரபட்டர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

விட்டினு தேவனையும் ஸ்ரீ மகா தேவனையும்
விறும தேவனையும் சரசுபதி துர்க்கை வயிரவன்
கணபதி இவர்களையும், நமஷ்க்கிறேன்.
இந்த வயித்திய சிந்தாமணியிலே விக்னம் வாராமல்
யிருப்பான் பொருட்டாக ஆசாரியன் பரம்பரையைச்
சொல்லுகிறார் ஸ்ரீ பிவற்சம் கோத்திரத்தில் னாகவும்
விறுமாவுக்குச் சமானமாகவு, மரேசுபர பெட்டரென்கிற
பேரையுடைய

முடிவு :

மஞ்சள் குனுப்பு இந்துப்பு குறிஞ்சார் வேர் பெருங்குரும்பைவேர்
கொம்பு அட்ட வற்கம், திப்பிலி, அமுக்கிராங் கிளக்கு
செவ்வியம் கடுக்காய் நெல்லி முள்ளி தானிக்காய் செவ்வளி
கொடி முத்தக்காசு

குறிப்பு :

இது, யூகிமுனி வைத்திய சிந்தாமணியின் வேறாயது. பிழைகள் அதிகம்.

இதில், தொடக்கத்தில் நாடிச் செய்திகள் உள்ளன பிறகு தாளிச பத்திரி சூரணம், அமுதாக பூராத குளிகை, மண்டூக வகை, எலி கடிக்கு, சிலேட்டுமத்துக்கு, சோபத்துக்கு, குன்மத்துக்கு, வெள்ளை காண்கிற வெட்டைக்கு, கண்ணுக்கு மெய்தலை வாயுவுக்கு மை, பிற மூலத்துக்கு, உள் மூலத்துக்கு முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3375 சுவடி எண் : 1672-3

அகத்யதிர் சாத்திரம்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை 100 அளவு : 28×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சொல்லரிய சமயங்க ளிராறல்ச்
சுயரூப ஆனந்த ஒளி வுமல்ல
நல்லதொரு அஷ்டாங்க யோக மல்ல
நலமுடைய சித்திவகை எட்டு மல்ல

முடிவு :

நவிலுரோம் நாதவிந்து மோனமாம் பிரணவத்தை
முழுதுமே வளைய கட்டி வான மாதும்
காரந்தன்னை வளைந்துநீ சத்தி யோடே
எனமாம் நடுவேயேறி தலையினில்ச் சூல மிட்டே —10

குறிப்பு ;

இதில், குன்மம் எட்டுக்கும் அவுழ்தம் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3376 சுவடி எண் : 1672-b

அகத்தியர் கரும சூத்திரம்—150

ஏடுகள் : 26 கி. எண்ணிக்கை : 600 அளவு : 28 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

காலம் :

அட்செய வருஷம் ஆவணி மாதம் 6-ந் தேதி அகஸ்த்திய நயினார் அருளிச் செய்த வயித்திய சூஸ்த்திரம் கெந்த பொடி அடைக்கலவம் பிள்ளை யவர்கட்கு வீர பண்டாரத்தின் மகன் வீரப்பன் எழுதி முடிந்தது முற்றும்.

குறிப்பு ;

இது, எமது சுவடி எண் 440/D-952 போன்றது.

இதன் பின் ஏட்டில், மஞ்சக் காமாலைக்கு, பித்தக் காமாலைக்கு மருந்து எழுதப்பட்டுளது

வரிசை எண் : 3377 சுவடி எண் : 1672-c

அகத்தியர் கர்ம காண்டம்_300

ஏடுகள் : 97 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 28 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

காலம் :

சித்திரா யுத்தி வருஷம் ஆடி மாதம் 17-ந் தேதி விரையாச்சியிலிருக்கும் அடைக்கலம்பிள்ளை கற்மகாண்டம் எழுதி முடிந்தது. முற்றும் குருமுன்னிற்க வேணும் குரு கிடாச்ச முண்டாக வேண்டியது.

குறிப்பு ;

இது, எமது சுவடி எண் 793 a/D-1598 போன்றது.

வரிசை எண் : 3378 சுவடி எண் : 1673-a

அகத்தியர் குழம்பு

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 700 அளவு : 25 x 3 செ.மீ.
பக்கத்திற்கு : 14 வரிகள் (அரியசாதனை) ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி
பொருள் : மருத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பூருவந் தன்னில் வாழும்
பரமனா ரருளி னாலே
பொறுமையாய் உலகில் வாழும்
புண்ணிய சனங்க ளுக்கு
உறுபல வியாதி வந்தால்
உண்மையாய்த் தீரு மென்று
பெருபல முனிவன் தானும்
பேசிய மருந்து கேளே ! — 1

முடிவு :

சொன்னமொழி மெய்யே யென்று குழம்புதனை
மேதினி யோர்க்கு மருந்து செய்யே — 54

குருசாமி துணை
தெட்சணாமூர்த்தி துணையா இருக்கவும்

குறிப்பு :

இது எமது சுவடி எண் 746-c/D-1470 போன்றது. எமது மகாலில் அச்சாகியுளாது. இதன் 3-வது ஏட்டில் 13 வரிகள் எழுதப்பட்டுள்ளது வியக்கத் தக்கது.

வரிசை எண் : 3379 சுவடி எண் : 1673-b

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 212 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 32×3 செ.மீ.
பக்கத்திற்கு : 4—8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நன்றாக குரு வாழ்க குருவே துணை.
மேகம் 21-க்கும் செய்யும் குணம்.

மேகந்தா னிருபத் தொன்று வியாதி
பிறக்கும் தானம் கேளீர்
தாகமுடனே பிரமியமு ம்
தங்கசேர் நீரு முண்டாகும்

முடிவு :

இறீம் ஸ்ரீம் எழுதி கோணம் அஞ்சிலும்
5 போட்டு வைத்துக்கொண்டு
அவ சிவா கெணபதி தேவா வென்று
வணங்கவும்

குறிப்பு :

இதில, மேகம் 21-க்கு, கல் நார் சூரணம், பிள்ளை பெத்த விடத்தில் லத்தம் தொங்குறதுக்கு கண்டங்கத்திரி லேகியம், ராமபாண மாத்திரை, சட்டைமுனியார் குழம்பு, மாந்திரீகம் முதலியன உள்ளன.

சில ஏடுகள் வெவ்வேறு அளவில் உள்ளன.

வரிசை எண் : 3380 சுவடி எண்: 1674-a

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 29 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

மலடி வயத்தில் திமிர்ப் புழு சாக மருந்து

ஆலம்பாலிலே கருங்குருவை அரிசி
ஊறவைத்து அரைத்து உருட்டி விழுங்கவும்
புழுச்செற்று விழுந்தபின்பு குளி நன்று
பிள்ளை யுண்டாவாள்

முடிவு :

கத்திரி மஞ்சள் விராகனெடை மிளகு வராகனெடை —1
ஈரவெங்காயம் படி ¼ கருங்கிரந்தியானால் கருநொச்சியிலை
ஒருபடி. சீரகம் மிளகு இதெல்லாமரைத்து …………
உச்சியிலேயும் மேலெங்கும் தடவவும்
நோக்காடு அதிகமானால் தினங் குடுக்கவும் வேறு.

குறிப்பு :

இதில், கிறாணிக் குளிகை, பவுத்திரம் ஆறுக்கும், இந்திர திரிச்சியமாவதின் குணம், தலையில் புழுக்கூடிக்கி, செவியில் புத்துக்கு, ஆகிய மருந்துகள் உள்ளன.

இதன் பின்னர் கயறு போட்டுப் பார்க்கும் 2 சிறிய ஏடுகள் உள்ளன.

★ ★ ★

வரிசை எண் : 3381 சுவடி எண் : 1674-b

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 350 அளவு : 29 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சந்தனாதித் தயிலம்

வெங்கம்பூர கட்டை	பலம்	5
மலாக்கா கட்டை	,,	5
அகில் கட்டை	,,	3
தேவதாரம்	,,	1
பூத கரப்பன்	,,	2
இலவங்கப் பட்டை	,,	1

முடிவு :

இதில் உஷ்ண வாயுவு அக்கினி மந்தம் செரியாக் குணம் கெபதி சூசிகா வாயு மிது முதலானது சகலமுந் தீரும். அந்த சுறாச்சூரணம் சர்க்கரை கலந்து சாப்பிடலாம். உஷ்ண வாயுவு தீரும்.

குறிப்பு :

இதில், வில்வாதி லேகியம், சகல பீனிசத்துக்கு மருந்து, அண்டவாதத்துக்கு மருந்து, மஞ்சள்காமாலைக்கு, நெஞ்சடைப்புக்கு முதலான மருந்துகள் உள்ளன.

வரிசை எண் : 3382 சுவடி எண் : 1674-c

அகத்தியர் வைத்தியம் — 50

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 400 அளவு : 29×3 செ. மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 745-r/D-1483 அகத்தியர் சூத்திரம்—50 போன்றது.

வரிசை எண் : 3383

சுவடி எண் : 1674-d

அகத்தியர் வைத்தியம் — 36

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 300 அளவு : 29×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 580-b/D 1196 அகத்தியர் சூத்திரம் 36 போன்றது.

வரிசை எண் : 3384

சுவடி எண் : 1674-e

அகத்தியர் வைத்திம் _ 16

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 29×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 764 c D-1531 போன்றது.

இதன் பின்னர் 'பெரிய மருந்து கோளாய்' எனத் தொடங்கும் பாடல்கள் 2 உள்ளன.

வரிசை எண்: 3385

சுவடி எண்: 1674-f

கோரக்கர் கற்பம்

ஏடுகள்: 3 கி. எண்ணிக்கை: 100 அளவு : 29×3 செ.மீ

பக்கத்திற்கு: 8 வரிகள் ஆசிரியர் : கோரக்கர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி : ஓம் குருவே துணை

சீர்பெறு கோரக்கர் சிறந்தநல் மூலிகை
யேர்பெறு தப்பனம் எளிசொல் சீகரம்
கார்புறு ஞானஞ் சகல கலைதரும்
நேர்பெறு கற்பம் நிலமை யியம்புவாம்

முடிவு:

விளங்கிடும் நல்லெண்ணெய் மேவும் புளிமுதல்
வளங்கும் பகையெல்லா மாதி யறிவுடனே
களங்கமில் கோரக்கர் கருதிடுங் கற்பத்தை
யுளக்களி கூர்ந்துநீ யுகந்திடுஞ் சித்தியே ! — 28

குருசுவாமி லெட்சிக்கவும்

குறிப்பு :

இது, கோரக்கர் கெற்ப முறை 31-ன் வேறாயது. இதில், காய கற்பம் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3386 சுவடி எண் : 1674-g

அகத்தியர் கர்ம சூரத்திர காண்டம்-300

ஏடுகள் : 105 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 29×3 செ. மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

காலம் :

சுக்கில வருஷம் ஐப்பசி மாதம் 7-ந் தேதி கெந்தபொடி அடைக்கலம் பிள்ளை யவர்கள் குமாரன் சுப்பிரமன்னியன் கர்ம சூத்திரம் விரையாச் சிலை அங்களாம்மன் கோவில் வீரபண்டராம் எழுதி முடிந்தது முற்றும். சூத்திர முன்னூறு. கற்மநிவர்த்தி நூத்தன்பது. இது மூன்று நூலும் கர்ம சூத்திரமென்று சொல்லப்பட்டது.

குறிப்பு:

இது, எமது, சுவடி எண் 592/D-1210 அகத்தியர் கர்ம சூத்திரம் — 300 போன்றது.

இதன் பின்னர் வங்கக்கட்டு முறை எழுதப்பட்டுளது.

வரிசை எண் : 3387 சுவடிஎண் : 1674-h

அகத்தியர் சூத்திரம்-100

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 400 அளவு : 29×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

ஆதியந்த மில்லாத பொருளைப் போற்றி
அறையிரேன் பல்திரட்டை அப்பா கேளு
வேதையுடன் வைத்தியமும் மறைவு நீக்கி
விள்ளாத கருவையெல்லாம் விளக்க மாக
நாதமென்ற பெருவெளியில் விருதுண் டாகி
நாலாறு மாதராம் அதிலுண் டாகி
சாதியென்ற சாதியெல்லாம் அதிலுண் டாகி
தத்துவங்க ளாகிநின்ற தனைத்தும் பாரே ! —1

முடிவு :

நடந்திடுவாய் இருவத்தோர் திரமே சாய்ப்பாய்
நல்லவெள்ள போலவங்கே நீரை வாங்கும்
புடந்தனிலே போகாது வெள்ளி மாற்கம்
பொய்யல்லச் சொன்னதெல்லாம் நிசந் தப்பாதே ! —65

சாமி லெஷ்சிக்கவும்

குறிப்பு :

இதில், 65 பாடல்களே உள்ளன, இதில், தங்கபற்பம், வங்கபற்பம், கருவங்க பற்பம், சூதபற்பம, சூத செந்தூரம், தாம்பிர பற்பம், தாளக பற்பம், திராவக பற்பம், பவள பற்பம், கிளிஞ்சிச் சுண்ணாம் வெடியுப்புச் செயநீர், கெந்திபற்பம், செயநீர் சாதிலிங்கக் கட்டு கருவாங்க வெட்டை, அயச்செம்பு, தாளக வெள்ளை முதலான பல மருந்து முறைகள் பேசப்படுகின்றன.

வரிசை எண் : 3388 சுவடி எண் : 1674-i

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 250 அளவு : 29×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

காமாலைக்கு

வட்டப் பேய்மரட்டி யிலையைக் கருங்குருவை
யரிசியி லரைத்து பசுவின் பாலில் மூன்று நாள்
தின்னக் காமாலை தீரும்

முடிவு :

யிருப்புக் கரண்டியால் கிளரிக் கொடுத்து ஒருபடி
பசுவின் நெய் விடவும். பல வாசினை வந்தவுடனே
மெளுகுப் பதத்தில் இரக்கிக் கொள்ளவும். இரக்கி
வைத்து ஒரு நாளிகைக்குப் பிற்பாடு குளிர
ஆரவச்சுக் கால்படி தேன் விடவும்.

குறிப்பு :

ஈடேத்த மில்லாம லிருப்பார் தானே ! —8

முடிவு :

ஆனவிவ் வகையெட்டும் அறிந்த பேரை
அவனிதனிற் பண்டிதரு மறியச் சொல்வார்
ஈனமில்லாப் பொறியடக்கும் பெரியோ ரன்றி
எயிதாது யாவருக்கும் யியம்புங் காலே! —36

அகஸ்திய முனிவரருளிச் செய்த
வயித்திய சார முத்துப் பெத்தது

குறிப்பு :

இதில், முதல் ஏடு இல்லை. கடைசி ஏடு கொண்டு தலைப்பிடப்பட்டது. பிண்ட உற்பத்தி, கருத்தரிக்கும் விதம், தச வாயுவுகளின் குணம், வாயுவிருப்பிடம், தச நாடிகளின் பெயர் முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3454 சுவடி எண் : 1688-c

அகத்தியர் நோயின் சாரம்

ஏடுகள் : 14 கி. எண்ணிக்கை 600 அளவு : 30×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கரிமுகக் கடவுளைக் கவுரி மைந்தனை
விரிகடல் வாயனை வேதவே தாந்தனை
யரிதிரு மருகனை யாதி சோதியை
பரிவொடு தொழுதவர் பாதம் போற்றுவாம். —1

முடிவு :

உரைவிடும் பிராண னென்று
உண்மை சொல்வதன் கடத்திற்
பரையது கட்டிச் சாற்றும்
பண்டிதர்க் கெல்லாம் பாரே ! —66

அகஷ்தியர் அருளிச் செய்த
நோயின் சார முத்துப் பெத்தது

குறிப்பு :

இதில், மாதங்களில் நாடி பார்க்கும் காலம் அறிதல், நாடி பார்க்கில், பலித்திடாக் காலமறிதல், மந்த சுரக் குணம், சுரங்களும் பாஷாணத்தால் தீரும் கர்ப்பந் தரித்த நாடி குணம், காலன் பிடிக்கும் நாடி முதலான பல தலைப்புகள் உள்ளன.

—+ + +—

வரிசை எண் : 3455 சுவடி எண் : 1688-d

அகத்தியர் அவிழ்த சாரம்

ஏடுகள் : 25 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 30×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள்: மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியாங் கணேசன் காப்பு
அருநூற்றுக் கருவை யெல்லாம்
சோதியாம் ஆயி பாதந்
துணையென உட்கொண் டேத்தி
நீதியாந் திரட்டுச் சூஷ்திரம்
நிலைத்தவா கடமாய்ச் சொல்ல
வாதமரம் பிணிகள் தீரும்
மருந்தொடு குணத்தைக் கேளே ! — 1

முடிவு

மருக்காரை சுக்கு மருதந்தோல்
வெவ்வேறு எருக்கா வாரை
பிறம்போடேழு மருந்திட்டு
நாலிலொன்றாய்க் காய்ச்சி
நாலுநாள்க் கொப்பளிக்கப்
பாலன் புல்லாங் கிளவன்ம் பல் —131

குறிப்பு :

இதில், வாதம் எண்பதுந் தீரச் சூரணம், பித்தம் நாற்பதுந் தீரச் சூரணம், சகல வாவுந் தீரச் சூரணம், சகல கரப்பானுந் தீர யெண்ணெய், பஞ்ச சுவாச காசந் தீரப் பொடி முதலான பல தலைப்புகள் உள்ளன.

இதனை அடுத்து ஒரு ஏட்டில், சுவடியில் எழுதி மாட்ட வேண்டிய மந்திரங்கள் எழுதப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3456 சுவடி எண் : 1689

அகத்தியர் சௌமிய சாகரம் – 1200

ஏடுகள் : 288 கி. எண்ணிக்கை: 10000 அளவு : 27×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

காலம் :

விளம்பி வருஷம், பங்குனி மாதம் 23-ந் தேதி புதன் கிழமை எழுதி நிறைந்தது. முற்றும். அடைக்கலம் பிள்ளை குமாரன் ஆறுமுகம் சவுமிய சாகரம் நிறைந்தது. முற்றும். ஸ்ரீ ராம சகாயம். சிருத்தல் பல்லே பெரியகன்னம் சரீமினாயக்கர் குமாரர் நாராயணசுவாமி கையெழுத்து

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 746-a/D- 485 போன்றது. எழுத்துக்கள் நன்றாக உள்ளன.

வரிசை எண் : 3457 சுவடி எண் : 1690-a

அகத்தியர் சூத்திரம் – 1500

ஏடுகள் : 139 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 28×4 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அடிமுடியு மாகிநின்ற நிற்குணத்தைப் போற்றி
அதுகடந்த நிற்குணத்தை அடுத்தென் னாளும்
வடிவுடைய சிவனுமையைப் பூசை பண்ணி
மகத்தான சின்மயத்தின் கருணை யாலே.

நூல்

பாகுடன் கிணேசன் பாதம்
பணிந்து முக் குணங்க ளாய்ந்து

முடிவு:

ஆமப்பா ஆவரந்தோல் அரும்பு போட்டு
மிவைவகைக்கு ரெண்டுபல மரிந்து விட்டு
வேமப்பா ஒருசாமம் வறுத்தா யானால்
வெள்ளையாம் திரும்பவதைக் கீண்டு கிண்டே —763

குறிப்பு :

இதில், 763 செய்யுட்களே உள்ளன. இது, எமது சுவடி எண் 301-h/D-539 போன்றது.

வரிசை எண் : 3458 சுவடி எண் : 1690-b

அமுர்த சஞ்சீவி

ஏடுகள் : 139 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 28×4 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

அச்சுதானந்த கோவிந்தா நமோச்
சாரண பேஷ சாது நச்சந்தி ....
× × × ×
துதிபொறக் கணபதிதன் பாதம் தொழுது
வணங்கியான் செய்தயிது அமுர்தசஞ் சீவியெல்லாம்
ரோகம் நிவற்தி யதாய் விதியும் நவக்கிருகமும்
வினைகள் மிகைகள் வெருண்டோட

முடிவு :

உனத்துக் குடுத்து மூணு சாமம் சுருக்குக்
சுருக்குக் கொடுக்கவும். இந்தப்படி ஆறுசாமம்
சுருக்குக் குடுக்க அக்கினி செயமான பற்பம்.
குரு முன்னிற்கவும்.

காலம் :

விய வருஷம் ஆவணி மாதம் 14-ந் தேதி திங்கட் கிழமை விளக்கு வச்ச மூணு நாளியலுக்கு எழுதி முகிந்தது. யிது எழுதினது ஸ்ரீ பெரிய கன்னம னாயக்கர் குமாரன் நாராயண சாமி எழுதினது அடைக்கல காத்தவள் துணையாக வேண்டியது.

குறிப்பு :

இதில் தலைப்பு இல்லாததால் செய்யுள் குறிப்புப்படி தலைப்பு கொடுக்கப்பட்டது இதில் தொடக்கம் வடமொழி சுலோகங்கள் தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன

இதில், வயித்தியர் லட்சணம், வயித்தியர் குணம்; மருந்து பிலன், அகஸ்தியர் கல்ப்பம் அகத்தியர் குழம்பு, பித்த காசத்துக்கு முதலான பல தலைப்புகள் உள்ளன.

இதன்பின் இரண்டு ஏடுகளில் மருத்துவம் எழுதப்பட்டுள்ளன.

வரிசை எண்: 3459 சுவடி எண் : 1691-a

மகாவல்லாதி

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 60 அளவு : 26×3 செண்டி மீட்டர் பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

நாதமெண்ட பெண்ணாசைக் கின்பந் தேடி
நாதமுறிந் தகலாத மேக மூறி
ஆதவா வில்லாத விசகடியு மீறி
அகலாத குஷ்ட்டமெல்லாம் அகலக் கேளு

முடிவு :

சண்ணுமே தேகமதில் மேக வூரல்
சலிப்பான விஷகடியுந் தான்விட் டேகுங்
கண்ணுமே திமிரமுடன் படலம் புள்ளி
கழன்றிடுமே மூவாறு குஷ்டந் தானே !

குறிப்பு :

இதில், வல்லாதியின் குணமும், தீரும் நோய்களும் பேசப்படுகின்றன.

வரிசை எண் : 3460 சுவடி எண் : 1691-b

தெட்சிணாமூர்த்தி பின்னூல்—8 ।

ஏடுகள் : 23 கி. எண்ணிக்கை : 700 அளவு : 26×3 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 7.6-b/D-1151. அகத்தியர் பின்னூல்—80 போன்றது. மருத்துவத்தில் அகத்தியரும் தெட்சணாமூர்த்தியும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

வரிசை எண்: 3461 சுவடி எண்: 1691-c

அகத்தியர் ரெத்தினச் சுருக்கம் 360

ஏடுகள்: 92 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 26×3 செ மீ.
பக்கத்திற்கு: 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து : தமிழ்

காலம் :

சந்தனம் அடைக்கலப்பிள்ளை மகன் ஆறுமுகம் சாஷ்த்திரம் எழுதி முகிந்தது முற்றும்.

குறிப்பு :

எமது சுவடி எண் 249 D-439 போன்றது அச்சிடப்பட்டுளது.

வரிசை எண் : 3462 சுவடி எண் : 1691-d

பிரம்மமுனி வைத்தியம்_385

ஏடுகள் : 97 கி. எண்ணிக்கை : 3600 அளவு : 26 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : பிரம்மமுனி பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 322-c/D-616 போன்றது. 384 செய்யுட்களே உள்ளன. ஆனால் ஆறுமுகம் பிரம்மமுனி சாத்திரம் முன்னூத்தி எண்பத் தஞ்சு எழுதி முகிந்தது முற்றும். என்றுளது.

வரிசை எண் : 3463 சுவடி எண் : 1691-e

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 200 அளவு : 26 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சகல சூலைக்கி அவுழ்தம்
சாதிக்காய் வராகனெடை — 5
சாதிப்பத்திரி வராகனெடை — 4
கிராம்பு ,, — 15
குரோசாணி ஓமம் ,, — 16
ஏலம் ,, — 15

முடிவு :

வயரெரைச்சல் சீ இரத்தந் தீரும்
போய்விடுமே வாய்வுடன் அக்கினியாம் மந்தம்
பொல்லாத வுதிரவெப்பு அபான வாயுவு
போயிவிடுமே அதிசாரக் களிச்சல்
கிராணியாறும் யோக்கிவிக்கி மின்

குறிப்பு :

இதில், கிரந்திப்புண், கருமேகஞ் சகலமுந் தீரும். ஆளப் புண்ணுக்கு களிம்பு' கண்டாத்திரி லேகியம், புகைச்சலிருமலுக்கு மருந்து ஆகியவை உள்ளன.

வரிசை எண் : 3464 சுவடி எண் ; 1691-f

திருமூலர் சன்னியானந்த வயிரவ மாத்திரை

ஏடுகள் : 97 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 26×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம்

மாத்திரையன் செய்யும் விபரங்கள்
நாபி சூத மனோசிலை கெந்தகம் நல்ல
லிங்கம் அரிதாரம் திப்பிலி நேர்வாளமும்
வெங்காரம் வீரமும் நெரிவிஷமோடு
நிரைசரி கூட்டிடே

முடிவு :

ஒரு விராகனிடை அரைவிராகனிடை
இப்படி வியாதியினுடைய பிலன் கண்டு
குடுத்து வரவும். சருவ வியாதியுந் தீரும்.
சருவ சஞ்சீவீத் தயிலம் முகிந்தது முற்றும்.

குருகிடாட்சமுண்டாக வேணும்
அடைக்கலங் காத்தவள் துணையாக வேணும்

குறிப்பு :

இதில், அத்தனாரி மாத்திரை, அக்கினிக் குமாரன் குளிகை, சுரநவமணி, கஸ்தூரி மாத்திரை, சுரகேசரி மாத்திரை, வாத ராட்சதன், தாளக செந்தூரம், ரச செந்தூர மாத்திரை, பவளபற்பம், குமரி பற்ப மென்னும் பேர், குமரி மண்டூர பற்ப மென்று பேர், மூலத்துக்கு மருந்து, கிராணிக்கு, வயத்துக் கடுப்புக்கு, பிரமியத்துக்கு, முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 2465 சுவடி எண் : 1691-g

திருமூலர் வைத்தியம்

ஏடுகள் : 18 கி. எண்ணிக்கை : 600 அளவு : 26 × 3 செ மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சுரவீக்கக் குடிநீர்

முறுமுன்ளி நன்னாரி வெள் வெங்காயம்
முதர்வசம்போ பிந்துப்பு கடுக்காய் முள்ளி
மருவிய நாருத்தை எலுமிச்ச வெள்ளை
வக்கணம் மலைதாங்கி குப்பை மேனி

முடிவு :

வெருகடிப் பிரமாணம் சாப்பிடவும்
யிச்சா பத்தியம் சுகந்த வுரவும் மருந்து
ஆனாப்பிலை ஒருநாள் பத்தியம்
முசுமுசுக்கைச்சாறு முளுகவும்.
சகல சூலை சகல மேகங்களெல்லாந் தீரும்.
வாலாம்பிகை துணை.

குறிப்பு :

இதில், சுரவீக்கக் குடிநீர், சுரத்தின் மேல் மலக்கட்டுக்கு, கெற்பிணி சுரத்துக்கு. வாதபித்த சுரத்துக்குக் கிசாயம், பித்தசுர கிசாயம், சகல சுரத்துக்கு மலச்சிரக் குடிநீர், வாத, சிலேட்டுமத்துக்கு கிஷாயம், குருங் கோழிச் சூரணம் முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3466 சுவடி எண்: 1692-a

அண்டநீர்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 30×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம்

காட்டுரே னண்டத்தோல் சுண்ணாம் பாக
கடுஞ் சுருக்கா யூதினது பலந்தா னொன்று
மூட்டுரேன் சுண்ணாம்புத் தண்ணீரை விட்டு
முசியாமல் கரைத்து நன்றாய்த் தெளிவோர் சேரை
நாட்டிறே னதில் மருந்து நாபி பூரம்
நலமான வீரமொடு சாரஞ் சீனம்

முடிவு :

மறையான தொந்தவித்தை கோடா கோடி
மாட்டுறதோர் கெடுப்பினங்கள் கோடா கோடி
நிறையான ரசவித்தை வங்க வித்தை
நேராக வெடுத்த தெல்லா மாடுங் காணே! —16

காலம் :

குரோதன வருஷம் கார்த்திகை மாதம் 9-ந் தேதி எழுதி முகிந்தது முற்றும்.
மனோன்மணி லெட்சிக்கவேணும்.

குறிப்பு :

இது, அகத்தியர் நூலாகத்தான் இருக்கவேண்டும். அண்டத் தோலிலிருந்து சுண்ணாம்பு தயாரிக்கும் முறையும், அது தீர்க்கும் வியாதிகளும் உள்ளன.

இதன் முன் ஏட்டில், அடைக்கலம் பிள்ளை குமாரன் செனனக் குறிப்பு உளது.

வரிசை எண் : 3467 சுவடி எண் : 1692-b

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 60 அளவு : 30 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நீரழிவுக்கு

ஆவரை கொன்றை நாவல்
அலைகடல் பூதங் கோட்டம்
மேவிய மருத தோலும்
விரைத்துடன் ஒக்கக் கொண்டு
பூவிரி கூந்தல் மாதே
பொருந்திநீர் தன்னை உண்ணக்
காவரி நீரும் வற்றிக்
கடல்களும் வற்றுந் தானே !

முடிவு :

சாலத் தினமுங் கொள்விராய்த்
தறுகா துண்மை யிதுகேளாய்
ஏலங் குழலாய்ப் பலபிணியும்
எந்தவினையு மினிப் போமே !

குறிப்பு :

இதில், பற்பமும், தீரும் நோய்களும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3468 சுவடி எண் : 1692-c

அருணாசலர் பதிகம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 60 அளவு : 30 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : இலக்கியம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நினைவாகி மூலம் நிலையாகி நேசம்
நிசரூப மான வடிவேல்
மனமான மாய்கை யதிலே விளைந்து
மதியுங் கலங்கி வெகுவாய்
இனமேடிருந்து வயதேறி யுள்ளம்
எனதாகி ஏகி விடுமுன்
மனவேக மான அருணாச லீசர்
வரவேணு மெந்தன் முன்னே ! —1

முடிவு :

சூதாடி தின்ற சிவசூஸ்த்தி ரங்கள்
சுளிவா யமந்த சுளியே
பாதாதி கேச மிடனாடி நின்ற
படுகாளி யாடும் நடனம்
வேதாவு மாட மதியாட மூவர்
விளையாடி யெந்தன் வெளியே
வாதாடி வென்ற அருணாச லீசர்
வரவேணு மெந்தன் முன்னே ! —10

குருசாமி லெட்சிக்க வேணும்

குறிப்பு :

அருணாசலேசுவரரைத் தன்முன் வந்து காட்சி தரவேணுமென்று பதிகம் பாடியுள்ளார் ஆசிரியர்.

இதன் பின் 2 உதிரி ஏடுகள், மருத்துவமும், கொடுக்கல் வாங்கலுடனும் எழுதப்பட்டவை உள்ளன.

வரிசை எண் : 3469 சுவடி எண் : 1692-d

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 30 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பதம்

ராசியில்க் கன்னி ரசாயனஞ் செய்ய
நாரியே நீகேளாய்
காசியி லாதங் கண்டதில் பித்தங்
கலங்கி யெடுத்த இருமலுஞ்

முடிவு :

மையிடு கண்ணிடப் பாகனார் பூமியில்
வழுத்தினார் தமிழினாலே
வாதுபுரி பண்டிதர் சொல்லிய குணத்துடன்
மண்டல மனிதர் பணியே !

குறிப்பு :

இதில் வல்லாதி முதலான மருந்துகளும் அவை தீர்க்கும் நோய்களும் எழுதப் பட்டுள்ளன.

இதன் பின்னர் சீன பல்லவ மாத்திரை எழுதிய ஏடு ஒன்றுளது.

வரிசை எண் : 3470 சுவடி எண் : 1692 - e

அகத்தியர் — 1300

ஏடுகள் : 284 கி. எண்ணிக்கை : 10,000 அளவு : 30 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

பாகுடன் கிணேசன் பாதம்
பணிந்து முக்குணங்க ளாய்
வாகடச் சுவடி யெல்லாம்
வகைவகை தொகுத்துப் பார்த்து
வாகட விதியி னூலால்
அடத்திடும் நோய்க ளெல்லாம்
போகநல் மருந்து சொல்வோம்
புலந்தியனே பொருந்தக் கேனே ! —1

முடிவு :

ஒட்டாத யிளையொடு முருமல் விக்கல்
ஒட்டிடவே திப்பிலிவெந்தயம் நெல்லிப் பருப்பு
தட்டாத சித்தரத்தை நெற்பொறி சர்க்கரையுஞ்
சமனாக வகைக்கொன்று களஞ்சி யாடு
முட்டாகக் காயவைத்துத் தூளா யாட்டி
முறைமேயாடே வடிகட்டிக்கொண்டு நெய்யில் விரவி
கட்டாக அந்திசந்தி கொட்டைப் பாக்களவுங்
களங்க மறத் துன்றுவரில்க் க .....ம் போடே ! — 1300

அகத்திய நாயனாரருளிச் செய்த ஆயிரத்து முன்னூறு
முகிந்தது முற்றும்.
குரு முன்னிண்டு ரெட்சிக்க வேண்டியது. குருவே துணையாக
வேணும். சவரி வாத்தியார் மகன் மெக்கேலு

எழுதி முடிந்தது முற்றும்

குறிப்பு :

சுவடித் தலைப்பில் அகத்தியர் ஆயிரத்தஞ்ஞூறு என்றுள்ளது. இது, எமது சுவடி எண் 742-a/D-1452 எண்-786-a/D-1589 போன்றது. இது - 1500 எழுதத் தொடங்கி 1300 உடன் முடிக்கப்பட்டது போலும்.

வரிசை எண் : 3471 சுவடி எண் : 1693-a

வாதம் 80-க்கும் தைலம்

ஏடுகள் : 118 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 27×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6-7 வரிகள் ஆசிரியர் : திருமூலர்? பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

குருபாதமே துணை குருவர்ழ்க குருவே துணை
வாக்குண்டாம் .... தமக்கு
திருமூலசாமி துணை

நூல்

என்பது வாதந்தன்னிப்
யிருவகை வகுத்துக் காணில்
நண்பனை யுனாக்கு மேலே
நாற்பது வாதமாகும்

முடிவு :

மாதுகேள் பின்னைக் காய்போல்
மண்டலந் தின்பா யானால்
காதிய விசத்தின் பாண்டும்
கள்ளநோய் அகலப் போமே !
திருமூலசாமியுட சீசன் ஆறுமுகம்
ஆறுமுகம் காப்பாத்த வேணும் குருசாமீ
மனோன்மணி துணை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 154/D – 245 வாதம் எண்பதுக்கும் எண்ணெய் என்ற சுவடியினும் வேறாயது.

இதில், பித்த பாண்டு ரோகஞ் செய்யுங்குணம், நீராம்பல் செய்யுங்குணம், இதுக்கு லேகியம், மந்தாரகாசத்துக்கு செய்யுங் குணம்; சீமூலஞ் செய்யுங்குணம், சீமூலத்துக்கு லேகியம், அரையாப்புக்கட்டி கிரந்தி புண்ணுக்கும், சூலை வெடித்த பின்னுக்கு எண்ணெய் முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3472

சுவடி எண் : 16 3-b

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 39 கி. எண்ணிக்கை : 1200 அளவு : 27 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கை, கால் உடமபு எரிவுக்கு

வல்லாரை	பலம்	3
நல்லவெல்லம்	,,	3
ஏலம்	,,	½
அதிமதுரம்	,,	½

இந்த பச்சிலையும் சரக்கும் யிடித்து சூரணம் பண்ணிக் கோரோசினை பலம் 1/8 பொடிபண்ணி

முடிவு :

காலமே ஒரு கரண்டி விதமாய்ச் சாப்பிட்டு வர மேகவெட்டை குன்மவலி
உஷ்ணத்தின் மேலே எடுத்த ரோகமெல்லாம் தீரும்.
பத்தியம் புளி புகை தவிரவும் தீரும்
பச்சை மீன் பச்சை மாங்கிஷக்கட்டோடே ஆகாது.

குறிப்பு :

இதில், மலட்டு வலிக்கி நெய், சுரத்துக்கு சன்னிக்கு மாத்திரை, சகல சன்னிக்குத் தயிலம்-லோக செந்தூரம், விஷபாகம் வெப்புப் பார்வை காமாலை, வாயுவுத் திரச்சிக்கி மருந்து, வல்லாரை நெய் முதலான பல அரிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3473 சுவடி எண் : 1694

பேரில்லாப் பிச்சமுனி சாத்திரம்

ஏடுகள் : 203 கி. எண்ணிக்கை : 3600 அளவு : 15½×3 செமீ.
பக்கத்திற்கு : 5—7 வரிகள் ஆசிரியர் : பிச்சமுனி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை.

கணபதி யென்றிட..............கரும மில்லையே !

நூல்

சுரக் குறி

எல்லாத பேர்களுக்கும் ஈசுரன் பிரதானமானாப்போல்
சாதி களுக்கெல்லாம் கர்மசுரம் பிரதானமாய்
இருக்கும். அந்தச் சுரமும் மூங்கில் வ.........த்திலை ஆனாப்போலே

முடிவு :

அண்டவாதத்துக்கு

களச்சிப்பருப்பு நஞ்சை எடுத்துப் போட்டு
அண்டம் கருவிலே நஞ்ச கருவிலே
பொரித்து குடுக்கவும்

உப்பு புளி தவிரவும்.

குறிப்பு :

இதில், ஆசிரியர் பெயர் சரியாக எழுதப்படவில்லை. இதில், யெரிப்பு, பயித்தியம், மூவகைக்கும் மருந்து, இருமலுக்கு மருந்து, புண்ணுக்கு மருந்து, வெப்புப் பாவைக்கு, தாம்பர செந்தூரம் வக்க மருந்து, வெள்ளோக் காளத்துக்கு, பயித்தியம் முறிய முதலான பல தலைப்புகள் உள்ளன. பிழைகள் மலிந்துள்ளன.

வரிசை எண் 3474

சுவடி எண் : 1695

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 150 அளவு : 25 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 4—8 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள்: மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : மூற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

.... வல்லாதி

............அரையக் கேளேன்
விரையிரேன் மூக்கறுத்த கருப்பன் சூலை
விடிபுத்து குத்திப்புத்து சீறல் புத்து
விரையிறேன் விளிதொண்ட விளிகரப்பன்
வல்விசங்கள் நரம்பு தெத்து

முடிவு :

மறுத்துள்ள தானாம் வத்திக்கு விதி...........
ரோக மென்னலாமே. கண்டத்தோடு...........
ம்மிக் கபால கபாலமொடு சுண்டி இடித்து
முகஞ் செறிது சு........................

குறிப்பு :

இவை உதிரி ஏடுகள். இதில், பாஞ்சால குறிச்சி நாயக்கர் குரு மூலிகை முதலியன உள்ளன.

வரிசை எண் : 3475 சுவடி எண் : 1696-a

தெட்சிணாமூர்த்தி பலதிரட்டு

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 26×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி பொருள் : மருத்துவம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருமுன்னிற்கவும்
பஞ்சாட்சரம்

அச்சுதானந்த கோவிந்த நாமோச்சாரண
பேஷசான் சஸந்தி சகல ரோகாசத்தியம்

நூல்

துதிபொறக் கணபதிதன் பாதம் தொழுது
வணங்கியான் செய்த யிதுவே
அமுற்த சஞ்சீவி யெல்லாரோகம் நிவர்த்தியதாம்

முடிவு :

வயித்தியர் குணம்

வாதுபுரி வயித்தியரே சொல்லக் கேளீர்
வயித்தியர்க்குத் தலைமூன்று கண்மூன்று
நீதமுடன் னாலுமுக மாறுகைய்யும்
நேரான சரீரமெட்டுப் பாதம் நாலு

யீதறிந்தார் வயித்தியனாம் வியாதி தீர்ப்பா
னிதையறியா திருந்தால் மடைய னாவன்
சேதமில்லா மனிதர்களும் இங்னே சொல்வான்
செத்தசவ மாகுமிவ்ன் செய்மருந்து பொய்யே !

× × × × × ×

பரிச்சை சரீர மெட்டதாகும் மிகுந்த பத்தியமவனோ
மவ்வேளை பாதம் னாலகும்.

குறிப்பு :

இதில் வைத்தியன் லட்சணம், வயித்தியன் குணம், மருந்துப் பிலன், வயித் தியர் குணம் ஆகிய தலைப்புகள் உள்ளன. வைத்தியர் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கூறுகின்றது.

வரிசை எண் : 3476

சுவடி எண் : 1696-b

அகத்தியர் குழம்பு

ஏடுகள் : 3½ கி. எண்ணிக்கை : 100 அளவு : 26×3 செ. மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 745-c/D-1470 போன்றது.
இதில், கறுத்த குழம்பும் இருக்கிறது.
எமது மகால் வெளியீடு.

வரிசை எண் : 3477

சுவடி எண் : 1696-c

சட்டை முனியார் குழம்பு முதலியன

ஏடுகள் : 147½ கி. எண்ணிக்கை : 4000 அளவு : 26×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : சட்டை முனியார் பொருள்: மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சட்டைமுனி யீசனார் சகலமும் படைத்த
அறுமறை மொழியா யாவரும் பிழைக்க
குருபரன் சீசன் குளம்பு சூரணத்தை
திருவருளென்று சேவித்த பேற்கு மெய்யென
நாலாயிரத்தி நானூத்தோடு ஐயெட்டு
ஒரெட்டு அகண்டிடு மென்றே

முடிவு:

கமல் திட்டத்துக்குமேல்ச் சட்டியை வைத்துக்
குழிக்கு மேலே முழமிருக்க எருவடிக்கி
புடம்போடவும். நன்றாய் நீரிப்போம். பற்பமாகும்.
எடுத்துச் சிமிளில் வைத்துக் கொள்ளவும்.

குரு முன்னிற்கவும்.

காலம் :

ஆனந்த வருஷம் வையாசி மாதம் 2-ந் தேதி நாயத்துக்கிழமை பொழுது அஸ்த்தமச்சு க னாளியலுக்கு எழுதி முகிந்தது,

இது எழுதினது. கந்தசாமி கை எழுத்து.
அடைக்கலங்காத்தவள் துணையாக வேணும்.

குறிப்பு :

இதில்-பேதிக்கு சஞ்சீவிக் குழம்பு, பாசாண ரசமுறிவுக்கு,வாந்திக்கும், பேதிக்கும், தாளக முறிவுக்கு பேதி மாத்திரை, சாதிலிங்கக் கட்டு, விரோசனத்துக்கு, மூணாமுறை சுரத்துக்கு, அகஸ்தியர் பாடல், குன்மத்துக்கு, பாண்டு வீக்கத்துக்கு, ரத்த மூலம்' சீதக்கடுப்புக்கு, கன்ருத்திரி லேகியம், அசுவகெந்தாதிச் சூரணம், பாண்டுவீக்கங் களுக்கு முதலான பல அரிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3478 சுவடி எண் : 1697-a

சட்டை முனியார் நிகண்டு

ஏடுகள் : 97 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 31×3½ செ.மீ.

பக்கத்திற்கு 8 வரிகள் ஆசிரியர் : சட்டை முனியார் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 443-b/D- 958 போன்றது. தொடக்கம் முறிந்தும் ஒடிந்தும் உள்ளது.

★——★

வரிசை எண் : 3479

சுவடி எண் 1697-b

கம்பளிச்சட்டை கைலாசநாதர் சூத்திரம்

ஏடுகள் : 26 கி. எண்ணிக்கை : 1200 அளவு: 31 × 3½ செ மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : கைலாசநாதர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

குறிப்பு :

இது எமது சுவடி எண் 557/D-1164 போன்றது.

வரிசை எண் : 3480

சுவடிஎண் : 1697-c

கொங்கணர் ஞானம் முதற்காண்டம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 31 × 3½ செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : கொங்கண நாயனார் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 862-d/D-1800 போன்றது.

வரிசை எண் : 3481 சுவடி எண்: 1697-d

கம்பளிச்சட்டை கயிலாசமூர்த்தியார்

ஏடுகள் : 23 கி. எண்ணிக்கை : 500 அளவு : 31×3½ செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : ஞானம் கைலாசமூர்த்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

கயிலாச பரமபதத்தி லென்னை யாண்ட
கடவுளெனுந் தெட்சணா மூர்த்தி பாதம்
கயிலாசத் தெனையீன்ற மாயி பாதங்
கருணையுடன் போற்றிநித்தம் ஞானம் சொல்வேன்

முடிவு :

வாகான சேகண்டி போட்டே நூத்திப்
மவுனமன் றோ
சமரசந்தான் மக்காள் மக்காள்
வாகான ஞானவரை முத்துங் காணே ! 101

கம்பளிச்சட்டை கயிலாசமூர்த்தியார்
ஞான முற்றும்
சிவமயம் - தேவிசகாயம்

குறிப்பு:

இதில், மெய்ஞ்ஞானத்தின் தெளிவு கூறப்பட்டுளது. இதன் பின்னர் வைத்தியம் எழுதிய ஒரு ஏடு காணப்படுகிறது.

வரிசை எண் : 3482 சுவடி எண் : 1697-e

கயிலாசச் சட்டைமுனிநாயனார் வாத நூல் – 1000

ஏடுகள் : 157 கி. எண்ணிக்கை : 8000 அளவு : 31×3½ செ.மீ
பக்கத்திற்கு : 10—11 வரிகள் ஆசிரியர் : கைலாசச் சட்டைமுனியார் பொருள் : மருத்துவம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 443-a/D-957 போன்றது

வரிசை எண் : 3483 சுவடி எண்: 1698

அகத்தியர் பூரண காவியம் — 1000

ஏடுகள் : 157 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 48×3செ.மீ.ம்

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவ

நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

ஓமென்ற மூலகண பதியே காப்பு
உண்மையுடன் நடுமனையி லுகந்து நின்று
ஆமென்ற அமுற்தகலை உள்கொண் டேதான்
அடங்கியந்த மனோன் மணியின் அருமை யாலே

முடிவு :

மூத்தான சிவமதுவே ஆத்மா வாகும்
முழங்கி நின்ற னாதமாட சோதி யாகும்
சித்தான சித்ததுதான் அரிவ ....
(சின்) மயமாய் நின்றதுவே வித்து வாகும்
வித்தான வித்ததுதான் சுளிகண் பார்வை
வேதாந்த பூரணமே தான்தா னாகும்
பத்த .... தீட்சை தன்னி லேதான்
பத்தியுடன் தன்னறிவாய் பதிவாய் முத்தே! —1001

காலம் :

கலியுகாதி வருஷம் 4989 சாலியவாகன வருஷம் 1810 .... வருஷம் 1887, பசலி 1296 கொல்லமாண்டு வருஷம் 1062, இதில் செல்லாநின்ற சருவசித்து வருஷம் வைகாசி மாதம் சோமவாரம் .... திதி–பிரதமை, நட்சேத்திரம் ரோகணி அமுர்தயோகம் பூர்வபட்சம் சூரிய காலையில் பூதிய தேயுவில் இந்த சுபதினத்தில் ஞானகாவ்யம் ஆயிரத்தி .... எழுதி முகிந்தது.

இது எழுதிய நன்மை புதுவை யடித்த கவுண்டம் பாளையம் வனத்தாக்கலும் குமாரர் முத்துசாமிக்கவும் பொஸ்த்தகம் இது எழுதியது. கிஷ் .... வும் கண்ட மங்கலம் முத்துசாமி காலுவன், முத்துசாமி-மோட்டார் சுப்புராயபிள்ளை .... சிவப்பிரகாசம் கடைசியில் எழுதி ....

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 361/D-721 போன்றது. இதற்கு ஞானகாவியம் என்ற மற்றொரு பெயரும் உண்டு போலும்.

வரிசை எண்: 3481 சுவடி எண்: 1699

ஞான வெட்டியான் — 1500

ஏடுகள்: 167 கி. எண்ணிக்கை : 6600 அளவு : 31×4 செ.மீ

பக்கத்திற்கு: 8—9 வரிகள் ஆசிரியர் : திருவள்ளுவர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

கடவுள்துணை

வெள்ளை வாரணம்
பிள்ளையார் பதம்
உள்ளுவார் மனக்
கள்ள மறுமே !
பரிச்சுழி மீதில் கயல்ச்சுழி × × × × விநாயகன் காப்பதுவே !

திருச்சிற்றம்பலம்

நூல்

அண்டபிண்ட நிறைந்து நின்ற அயன்மால் போற்றி
அகண்டபரி பூரணத்தின் அருளைப் போற்றி
மண்டலஞ்சூ ளிரவிமதி சுடரைப் போற்றி
மதுரதமி ழோதுமகத் தியனைப் போற்றி

முடிவு :

சுரங்கள் சன்னி தோஷமும் கிணங்க ளள்ளு
கிராணியும்

சுவாசமும் சீரணம் பராசு பூத மோடிடும்
திரமனந் தசுக்கல்விக்கல் சோகை வீக்கமும்
சுரங்களேழு மோடிடுஞ் சுரச மிஞ்சி யாண்டையே — 1644

(ஞான வெட்டியான் யெடுத்தவர் படித்துக்
கொடுக்கவும் ததாகாரந் துணை)

குறிப்பு :

இதில், இடையிடையே ஏடுகள் இல்லை. எழுத்துக்கள் அழகாக உள்ளன.

இதில், தசனாடி முறை, ஆயுர் விருத்தி, அவயவங் குறையு முறை, இடை பிங்கலையினளவு, பிண்டோற்பத்தி, செறபக்குறி ஆறாதார தெரிசனை, பிண்டங் கீழ் நோக்குற்ற முறை, நொண்டிச்சிந்து, பிறந்தவகை, அச்சில் மறுபுத்தகம் ?, வாசி தாரணை, யோகசித்தி முதலான பல அரிய தலைப்புகள் உள்ளன. சிறந்த நூல்.

வரிசை எண் : 3485 சுவடி எண் : 1700

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 300 அளவு : 26×4 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கெடியான சித்தருக்கும் சிவயோ கிக்கும்
வாளப்பா உலகத்தில் வயித்தி யோற்கும்
வரிசைபெற சொல்லிவிட்டேன் னிருநூத் துள்ளே
நாளப்பா அகத்திசமாங் ரோகந் தீரும்
நாட்டினேன் முன்னூத்தில் சாஸ்த்தி ரத்தில்
வேளப்பா யின்னூலை வைத்துக் கொண்டு
வேணட்டி வயித்தியத்தை விரும்பிச் செய்யே !

முடிவு :

மெய்யெல்லாங் குளிர்ச்சிதரும் தெளிவுண் டாகும்
வெண்ணைதா னரிந்திடவே நீர்க்கடுப்பு யோகும்
பண்ணையிலே பால்க்கொருப பத்தத் தாலே
பறக்குமடா வெட்டையெல்லாம் பாரு பாரே ! — 30

யாற்ப்பது கல்நாரின் பற்பங்கேளு
பகருகிறேன் கொ.........

குறிப்பு :

இது வேறு சுவடியின் பிற்பகுதி போல உள்ளது. இடையிடையே ஏடுகள் இல்லை.

வரிசை எண் : 3486 சுவடி எண் : 1701-a

போகநாதர் மூலிகை நிகண்டு

ஏடுகள் : 17 கி. எண்ணிக்கை : 300 அளவு : 22 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : போகநாதர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுபெற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நடக்கினே நாலாயிரத்து நாற்பத் தெட்டு
விதமான மூலிகடக்கினேன் கற்பத்துக்
கெடுத்த மூலி காலாங்கி னாயனார் சொல்லக் கேட்டு
தொடக்கினேன் வகை விரும்பி,

முடிவு :

கரணமாம் ரஸ்த்தூரி வசிய மாகும்
கடிதான அக்கிமையின் வாதம் போகுங்
குறணங்கோ ரோசனையுள் விரணம் போக்கும்
குங்குமப் பூசிரிக்கில் நிற்கும் வாதம் போமே! —62

குறிப்பு:

இதில் தலைப்புகள் இல்லை. பிற நிகண்டுகளின் வேறாயது.

வரிசை எண் : 3487 சுவடி எண் : 1701-b

கந்தர் அனுபூதி

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 30 அளவு : 22 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அருணகிரிநாதர் பொருள் : இலக்கியம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

விநாயகர் தோத்திரம்
சிவமயம்
கந்தர் அனுபூதி

நெஞ்சக்கன கல்லு நெகிழ்ந்திடவே
தஞ்ச ரருள் சண்முக னுக்கியல் சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர வானை பதம் பணிவாம். —1

முடிவு :

மட்டூர் குழல் மங்கையர் மையல்வலைப்
பட்டுசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டு டுறவே சயிலத் தெறியும்
நிட்டூர சுராகுல நிற்பயனே! —10

குறிப்பு :

இதில், பிழைகள் மலிவு இதன் பின்னர் முருகமந்திரமும் சக்கரமும் உள்ளன.

வரிசை எண் : 3488 சுவடி எண் : 1702

தெட்சணாமூர்த்தி சௌமிய சாகரம்

ஏடுகள் : 49 கி. எண்ணிக்கை : 750 அளவு : 16 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக்க பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

கொள்ளடா அமுர்தரச பானந் தன்னை
குருவான சுழிமுனையில் மனத்தை நாட்டி
நில்லடா வாசியினால் மணிநா வுன்னி
நேர்மையுடன் மணிவாசல் பூட்டு தன்னை

முடிவு :

நேரப்பா அதினாலே வாத மாச்சு
நிலையாகப் புடமதிலே நின்று போச்சு
வேரப்பா வாதத்துக் குப்பேர் சொன்னேன்
வெளியோடே மன்ங்கலக்க வெளியு மாச்சு

குறிப்பு :

இதில் வெவ்வேறு பாடல்கள், வெவ்வேறு பாட்டெண்களுடன் உள்ளன.

வரிசை எண் : 3489 சுவடி எண் : 1703-a

அகத்தியர் ஞானம் – 30

ஏடுகள் : 14 கி. எண்ணிக்கை : 250 அளவு : 17 x 3½ செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 805/D-1613, அகத்தியர்-30 போன்றது.

வரிசை எண் : 3490 சுவடி எண் : 1703-b

மச்சமுனி ஞானம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 17 x 3½ செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : மச்சமுனியார் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றிற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அரி ஓம்

நெட்டுக் கொண்ட சடத்துக்கு ளாரென்றால்
நின்ற வன்னி ரவிசோமன் மூன்றல்லோ
கட்டுக் கொண்டிட வாயுவைப் பூரித்துக்
கலங்கி நின்று தவிப்பா ருலகத்தோர்

முடிவு :

பத்த ரென்றது வேரில்லை யுன்மனை
பானத் தாலும் பணிந்திட்ட பூசையால்
சுத்த ரென்றது வேரில்லை சுத்தத்தால்த்
தொட்ட லோகம் பசும்பொன்னு மானதே ! —10

குறிப்பு :

இது, முற்றுமுள்ளதா என்பதறியக்கூடவில்லை.

வரிசை எண் : 3491 சுவடி எண் : 1703-ட

அடுக்குநிலை போதகம் — 10

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 17×3½ செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 512-b/D-1111 'அகத்தியர் அடுக்குநிலை போதகம் — 10' போன்றது. அதில், 'அகத்திய மகாமுனிவர் அருளிச் செய்த அறுபத்தாறாவது அடுக்குநிலை போதகம்' என்றுளது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

இதன் பின்னர் ஒரு ஏட்டில், "சச=உ=டடநிதந்தமின்=சச=குகுகுகுகுகுகுகு=யேறி=குள்ம=றெமபிக்கிடக்க=நிநிநிநிநிநிநிநிநி=வாழ=கொண்டோடி வா" என்றுள்ளது.

வரிசை எண் : 3492 சுவடி எண் : 1704

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 57 கி. எண்ணிக்கை 1200 அளவு : 21×3 செ.மீ.

பக்கத்திற்கு: 7—8 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கபால வாயுவுக்கு
தளையிடிக்கித் தயிலம்

ஆலம்பட்டை பலம் 10
குருவிருசிவேர் ,, 5
குருந்தட்டிவேர் ,, 5
மிளகு ,, 5
உளுந்து படி 3/8 இதுகளெல்லாந் துவைத்து

முடிவு:

அமுக்கிறா வேர்—நன்னாரிவேர்—முத்தக் காசு—
லாமிச்ச வேர்—வெட்டி வேர்—தூதளை வேர்
கண்டங்கத்திரி வேர் நெய்த்து கிழங்கு
நெல்பொறி ஆக வகை 1-க்கு

குறிப்பு :

இதில், ஏடுகள் பிறழ்ந்துள்ளன. 1, 2 ஏடுகள் இல்லை. வாழாத பெண்ணுக்கு கொள்ளிகரை பாக்கு, விளங்காத பெண்ணுக்கு, எலும்புருக்கிக்கு, முலைப்பால் சுரக்க தாது வர்த்தினை, பார்ச வாயுவுக்கு, சுப்பிரமணி தியானம் (சக்கரம்) வீரராசன் குழம்பு, விசங்களுக்கு, பிரிவுக்கு, ரச கெந்தி மெழுகு முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3493 சுவடி எண் : 1705

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 22 கி. எண்ணிக்கை : 500 அளவு : 22×3 செ.மீ.

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கருஞ்சீரகம் ஆக வகை 1 - க்கு
களஞ்சி — 2, இந்த மருந்துகளை
ஆவின் பால்விட்டு அரைத்து
முனகி சாயத்தில் கலந்து
நீர் வத்த வடித்து

முடிவு :

கண்ணுக்கு பொடி

சீனக்காரம் களஞ்சி — 1
காவிமண் ,, — ½
அவின் ,, — ¼
ஆக இவ்வளவும் வறுத்து நுணுக்கி முலைப்பாலிலே
போட்டு காச்சி விடவும் கண் வியாதிகள் தீரும்

குறிப்பு :

இதில், திருச்சூரணம், இஞ்சிலேகியம், சக்கராயுத மாத்திரை, சன்னிவாத வயிரவன், வல்லாதி லேகியம், ராமபாண வல்லாதி வியாதியும், குணமும், பாண்டு சோகைக்கு முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3494 சுவடி எண் : 1706

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 70 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 24 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வாயுவு குத்தலுக்கு கியாழம்

பாரப்பா வாயுவேண்டி குத்துக் கேதான்
பண்பான கொடிவேலிப் பட்டை யோடு
வீரப்பா சுக்குடனே பரங்கிப் பட்டை
விதமான பிரம்பினுட கிழங்குங் கூட

சேரப்பா வகைவகைக்கு விராகன் மூன்று
செயவான நாலுபடி சலத்தை விட்டு

முடிவு :

தெள்ளவே சாம்பிராணி மிளகு சாரம்
தெளிவான சிற்றரத்தைக் கழல்ப ருப்பு
மெள்ளவே சீரகமு கலிங்கங் கூட
மேன்மையாய்ச் சமன்(ரெ)ண்டு அருக்கம் பாலில்
தள்ளவே திரியாக்கிப் புகைதான் காட்டத்
தலைவலியுந்...முத லோடிப் போமே. — 193

குறிப்பு :

இதில், ஏடுகள் தலைதடுமாற்றம். ஒரு சுவடியின் உதிரி ஏடுகளாக உள்ளன.

இதில், அரத்தை சிற்றரத்தை, பேய்நரி நாய்கடிக்கு, தெவிக்கு ஏகமூலம், வயிற்றுக் கடுப்புக்கு, பூனைகடி, தீபா மூலிகை, எலிகடிக்கு, நவக்கிரக தியானம் முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3495 சுவடி எண் : 1707

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 54 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 39 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வாதத்துக்குத் தயிலம்

.... கட்டி நீக்கில்லாச்
சித்தரத்தை நாற்பதுபலம் நிறுத்துப் போட்டு
தாக்கடா நொறுக்கித் தூணி நீர்தனில்
கஷாயத் தாட்டிப் போக்குட னெட்டொன்றாக்கி
வடித்துப்பின் கட்டக் கேளே !

முடிவு :

—...தலைநோவு வெள்ளோக்காளம்
முள்ளதெல்லா மஞ்சிப் பயந்து தானடுங்கி
யடவிக்சேகும் போய்விடுமே. — 1423

.........லைதா ....வேரு மகஸ்த்தான
நெல்லிக்காய் தான்றிக் காயு மிலையாட தோடைக்
கொடி தூவி யொடு ....

குறிப்பு :

இது, ஒரு பெருஞ்சுவடியின் உதிரி ஏடுகள். தலைப்பு மாறியும், தலை தடுமாறி யும் உள்ளன. 200-க்கும் மேற்பட்ட ஏடுகளையும் 1000-க்கும் மேற்பட்ட செய்யுட் களையும் கொண்ட சுவடியாகத் தெரிகிறது.

இதில், களிச்சல் குன்மந்தீர, பித்த வெட்டைக்கு எண்ணெய், அத்திசுரம் வெட்டை, வாய்வு எண்பதுந்தீர மருந்து முதலான பல தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3496 சுவடி எண் : 1708

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 200 கி எண்ணிக்கை : 10000 அளவு : 29 × 3½ செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : பயனற்றது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இடையிடையே சிதைந்து காணப்படுகின்றன.

இதில், அகத்தியர் குழம்பு, மச்சமுனி 800 முதலான சுவடிகளின் உதிரி ஏடு களாக உள்ளன. ஏடுகள் தலை தடுமாற்றமாக உள்ளன,

★ ★ ★ ★

வரிசை எண் : 3497 சுவடி எண் : 1709

இராமதேவர் ஐநூற்றுத் திரட்டு

ஏடுகள் : 97 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 20×3 செ.ம.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : இராமதேவர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

ஆதியந்த மெய்நிறைந்த சோதி பாதம்
அண்டபரி பூரண .... றவிற்கூடி
பாதியாய் முற்பொருளு மூன்று மொன்றாய்ப்
...........வெளியாய் நின்றபரா பரையின் பாதம்

முடிவு :

அண்டமா மிகுருவை அடியே பூசி
ஆனைக்கால் தன்னிலிட யசையா தப்பா
தண்டமாம் பச்சோந்தி வாலி னோடு
தருவான ஊன்கொடியும் வளைய மாடி
உண்ட......... .... — 348
இராமதேவர் அந்நூற்றுத்திரட்டு
எழுதினேன் குமாரு பிள்ளை கையட்சரம்

குறிப்பு :

இது எமது சுவடி எண் 450-d/D-996, எண் 661-a/D-1284 போன்றது. இதில் 97-ஆம் ஏட்டுக்கும் கடைசி ஏட்டுக்கும் இடையில் ஏடுகள் இல்லை போலும்.

வரிசை எண் : 3498 சுவடி எண் : 1710

தெட்சணாமூர்த்தி வைத்தியம்—1500

ஏடுகள் : 125 கி. எண்ணிக்கை : 10000 அளவு : 35×3½ செ.மீ
பக்கத்திற்கு : 10—12 வரிகள் ஆசிரியர் : தெட்சணாமூர்த்தி பொருள் : மருத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

பண்டிதனாம் பரிகாரி வயித்திய னென்று
பகருகின்ற மொழிகளெல்லாம் பரனுக் காகும்
கண்டிதமாய் முகம்பார்த்து நோயைப் பார்த்துக்
கரந்தெழுந்த நாடியுட கலக்கம் பார்த்து

முடிவு :

முன்புதிரிம் புகையேத்த வியக்கண் தீரும்
முனார்வங்கத் தளம்போட வகையைக் கேளே ! —1156

வகைகேளு யோரண்டவிஷ சூதத் தயிலம்
மங்கையர்கள் முலைப்பாலும் ....

குறிப்பு :

இடையிடையே ஏடுகள் இல்லை. உள்ள ஏடுகளும் தலை தடுமாற்றம்.
இதில், வாகடச் சுருக்கம், வாதமீறில். பித்த மீறில், சன்னி விபரம், மூல விபரம், கிறாணி விபரம், கெற்ப சன்னி, சுக சன்னி, அமிர்த சஞ்சீவிக் குளிகை; நீரளிவுக்கு மேகாதிக் குளிகை முதலான பல அரிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3499 சுவடி எண் : 171

தெட்சணாமூர்த்தி வைத்தியம் – 1500

எடுகள் : 240 கி. எண்ணிக்கை : 10000 அளவு : 38 × 3 செ மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக

பண்டிதனாம் பரிகாரி வைத்திய னென்று
பகருகிற மொழிகளெல்லாம் பரனுக் காகுங்
கண்டிதமாய் முகம்பார்த்து நோயுய் பார்த்து
கரந்தெழுந்த நாடியுட கலக்கம் பார்த்து

முடிவு :

பாரப்பா லாமிச்சு வகைக்கு முக்களஞ்சு
பழந்தேவதார வில்வங் கபத்திரியே. —1372
பத்திரியுங் கோட்டமொடு கெந்தகம்
பரிவான ....

குறிப்பு :

இதில், ஏடுகள் தலைதடுமாற்றம் இது முன் சுவடி போன்றது.

வரிசை எண் : 3500 சுவடி எண்: 1712

தெட்சணாமூர்த்தி ரெத்தினச் சுருக்கம்

ஏடுகள் : 50 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 20×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : தெட்சணாமூர்த்தி பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 249 D-439 ''அகத்தியர் வைத்திய ரத்தினச்சுருக்கம்' போன்றது. மருத்துவச் சுவடிகளில் அகத்தியரும், தெட்சிணாமூர்த்தியும் ஒன்றாகப் பேசப்படுகின்றனர்

வரிசை எண் : 3501 சுவடி எண் : 1713-a

பால வாகடம் கெற்ப நூல்

ஏடுகள் : 42 கி. எண்ணிக்கை : 500 அளவு . 20×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

வாலக்கிருகைக்குள் கவியும் மருந்தும்
மந்திர யெந்திரமும்

காலக்கழிப்புடி நீர் சொரியுங் கட்டுங்
 செலசெல வேருடனே
கோலக் குழையு மென்னைதன்னைத்
 குணத்தின்படியே கொள்வதற்கு

முடிவு :

ஒலக்கு வெள்க்கெண்ணெயில் வேகவைத்துப்
பாகமாய்க் காய்ச்சி யெறக்கிவைச்சுக் கொரண்டு
புள்ளையுளுக்கு புத்து நாளைக் கொருக்கால்
ஒரு கரண்டி யெண்ணை குடுக்கவும்
மாந்தம் பிணி தீரும்

தெட்சணாமூர்த்தி கைலாச பதி துணையாகவும்
அருமைபிள்ளை வர்ல் வாகடம் எழுதினது.

குறிப்பு ;

இதில், செங்கிரந்தி, கருங்கிரந்தி, மாந்தவுகை, காமாலை தணுந்தோடம், செங்கரந்திக் குணம், கருங்கிரக்கியின் குணம், பட்சி தோடம், பாற்புறவை தோஷம், காணாப்புறவை, முதலான புலதலைப்புகள் உள்ளன.

இது, முன் சுவடியின் தொடர்ச்சி பொலும்.

வரிசை எண் : 3502 சுவடி எண் : 17.3.b

குழந்தை வைத்தியம்

ஏடுகள் : 12 தி. எண்ணிக்கை : 150 அளவு : 20 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக

நாள் 1 மாதம் 1 வருஷம் 1-க்கும்
பிள்ளையைப் பத்திரகாளியென்னும்
பேயணையும் அதன் குணம் :-

கண் முளியாகுது.. குடிக்கத பாலெடுக்கும்
வயரு பொருழும்

முடிவு :

குாவி கூடு நுநுக்கி கரித்துணியில்
பொட்டணம் கட்டி கட்டிக் கொள்ளுகிறது.
பீ ரோகணிப் பசுவின் வெண்ணை போட்டு
வெருங்கலத்தில் போட்டு செம்பு கொண்டு யிளைச்சு
மையியெடுத்து வச்சுக் கொண்டு கண்ணில்
காசம், படலம் ஆணிப்படல முதல் கண்
வியாதிக்கி போடவும்

குறிப்பு :

இதில், பிள்ளைகளுக்கு மந்திரித்துக்கட்ட சக்கரங்கள் மருந்துகள் உள்ளன. தலைப்பு இல்லை. மருத்துவம் கருதித் தலைப்பு கொடுக்கப்பட்டது.

வரிசை எண் : 3503 சுவடி எண் : 1713-c

குருனாடி சாத்திரம்

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 500 அளவு : 20 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

கானென்ற நாத ரெங்கள் கருவென்ன குருவுமென்ன
னொனென்ற சித்தமென்ன மதிநின்ற வன்னியென்ன
கானென்ற கால்தா னென்ன காயமிக் குளவியென்ன
கோனென்ற உரைகலென்ன குறிப்புடன் சொல்லு மென்றார்.

முடிவு :

மானமாம் புரட்டாசிக்கும் மத்த ராத்திரியிற்
பாறகத் தென்னு மொழியள் பேசும்
சித்தர்கள் மெச்சுகின்ற ஞானம்
புலத்தியர் நீ தானன்றாக் அறிந்து கொள்ளே !

குறிப்பு :

இதில், தாம்பூலம், குருனாடி, சன்னி, பிளவை, நீரழிவுக்கு, கடுப்புக்கு, சயம், சூலை, குன்மம், மது பீனிசம், நாடிக்குறி, எண்ணைக் குறி, மாத்தைப் பலன் ஆகிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3504 சுவடி எண் : 1713-d

அகத்தியர் — 1500

ஏடுகள் : 18 கி. எண்ணிக்கை : 500 அளவு : 20 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 301-h/D 539 போன்றது. ஏடுகள் தலை தடுமாற்றம். பிற்பகுதி செய்யுட்களுக்கு எண்கள் இல்லை.

இதன் பின் வைத்தியம் எழுதிய ஏடுகள் 4 உள்ளன.

வரிசை எண் : 3505 சுவடி எண் : 1714

மச்சமுனி — 800

ஏடுகள் : 138 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 36 × 2½ செ.மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : மச்சமுனியார் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 842-b/D-1745 போன்றது. பாட வேறுபாடுகள் காணப்படுகின்றன.

வரிசை எண் : 3506 சுவடி எண் : 1715-a

கோரக்கர் கற்பம் — 10

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 30 அளவு : 36×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : கோரக்கர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

ஹரி : ஓம்

சீர்பெரும் கோரக்கர் சிறந்தநன் மூலி
யேர்பெறு லேபனம் யெழில்சேர் வசீகரம்
கார்பெறு ..... வசகல கலைதரும்
நேர்பெறு கற்பத்தின் நிலைமையை யியம்புவாம். —1

முடிவு :

வளமுறு சீனியில் வாதம் பளை...........
தள .... து செய்திடில் சார்ந்திடும் கற்பமே ! —10

குருகிடாட்சமே கெதி
தெட்சணாமூர்த்தி துணையாக வேணும்.

குறிப்பு :

இதில், கற்பம் செய்முறை கூறப்பட்டுளது. இதில் தலைப்பு இல்லை. முகப் பேட்டில் உள்ள தலைப்பு கொண்டு தலைப்பிடப்பட்டது.

வரிசை எண் : 3507 சுவடி எண் ; 1715-b

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 30×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

நாகம் காரீயம் கட்டு

பாகவே நாகமொரு பலத்தை நீயும்
பரிவாகத் தகடாக்கி பூசக் கேளு
சேர்க்கவே வீரமென்ற சுன்ன மொன்று
சிறப்பான பூரத்தின் சுன்ன மொன்று

முடிவு :

வீர யெருக்கப் பால் வேலிப் பருத்திச் சார்
விடசே நீர் விட்டு வீரமாவில் வைக்க
மெழுகு உப்பும் துத்தியிலையும் அரைத்துக்
கவசம் கட்டி அதுக்குச் சுண்ணாம்பு
சீலை சுத்தி அதுக்குமேல் சீலைமண் செய்து
கோழிப்புடம் போட தாள்கம்
உருமணியா நிற்கும் – சகல சுரத்துக்கும்.

குறிப்பு :

இதில், மேற்கண்ட தலைப்போடு துருசுச் சுன்னம் என்ற தலைப்பும் உண்டு.

வரிசை எண்: 3508

சுவடி எண் : 1715-c

தெட்சணாமூர்த்தி இந்திரசாலம் - 1200-ல் வைத்தியம்-முதற்காண்டம் – 300

ஏடுகள் : 37 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 36 × 3 சென்டி மீட்டர்

பக்கத்திற்கு : 8—10 வரிகள் ஆசிரியர் : தெட்சணாமூர்த்தி (அகத்தியர்)

பொருள் : மருத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது

எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 825-a/D-1649 அகத்தியர் சாலத்திரட்டு முதற்காண்டம் வைத்தியம் 300 போன்றது.

அகத்தியரும், தெட்சணாமூர்த்தியும் ஒருவரே போலும்

வரிசை எண் : 3509 சுவடி எண் : 1715-d

தெட்சிணாமூர்த்தி யிந்திரசாலம் 1200-ல் 2-ஆம் காண்டம்

ஏடுகள் : 45 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 36×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : தெட்சிணாமூர்த்தி (அகத்தியர்)

பொருள்: மருத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது

எழுத்து: தமிழ்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 852-b/D-1650 அகத்தியர் சாலத்திரட்டு வாதத்துறை 2-ங் காண்டம் போன்றது.

தெட்சணாமூர்த்தியும் அகத்தியரும் ஒருவரே போலும்.

வரிசை எண் : 3510 சுவடிஎண் . 1715-e

தெட்சணாமூர்த்தி இந்திரசாலம் 3-ஆம் காண்டம்

ஏடுகள் : 52 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 36×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : தெட்சணாமூர்த்தி (அகத்தியர்)

பொருள் : மருத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது

எழுத்து : தமிழ்.

குறிப்பு :

இது, எமது, சுவடி எண். 825-e/D-1651 அகத்தியர் சாலத்திரட்டு மூன்றாங் காண்டம்-இந்திரசாலத்தைப் போன்றது.

அகத்தியரும் தெட்சிணாமூர்த்தியும் ஒருவரே போலும்.

வரிசை எண் : 3511 சுவடி எண் : 1715-f

தெட்சணாமூர்த்தி சாலத்திரட்டு 4-ஆம் காண்டம் மாந்திரீகம்

ஏடுகள் : 57 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 36×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : தெட்சணாமூர்த்தி (அகத்தியர்)
பொருள் : மருத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

ஹரி; ஓம். தெட்சணாமூர்த்தி சுவாமி அவர்கள் பாடிய யிந்திரசாலம் ஆயிரத்தி -யிருநூறு யெழுதி முகிந்தது. முற்றும். சிவமயம் துணையாகவேணும். சில்லத்தூரி லிருக்கும் சாமுவய்யன் யெழுதி முகிந்தது முற்றும். வாலாம்பாள் துணையாக வேணும்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 825-d/D-1652 ''அகத்தியார் இந்திர சாலத்திரட்டு-மாந்திரீகத் துறை 4-ஆம் காண்டம்'' போன்றது.

தெட்சிணாமூர்த்தியும் அகத்தியரும் ஒருவரே போலும்.